விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 150 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 04 வெள்ளிக்கிழமை (17.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03,
2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# தமிழர்கள் கொடூரமாக கொன்று அழிக்கப்பட்ட மே 18 தமிழ்த் தேசிய துக்க தினமாகும்

## ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு

(முல்லைத்தீவு)

தமிழ் மக்கள் மிக கொடூரமாக கொன்று அழிக்கப்பட்டு 15 ஆண்டுகள் நிறைவுறுகின்ற வலி சுமந்த நாட்களை நினைவுகூருகின்ற இந்த தருணத்தில் தமிழராகிய எம் ஒட்டுமொத்த ஆன்மாவையும் பாதித்த மே 18 ஐ தமிழ் தேசிய துக்க நாளாக நாம் அனைவரும் கடைப்பிடிப்போம்.

ஏற்கெனவே வட மாகாண சபையால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளநிலையில்இதனை உணர்வுபூர்வமாக தமிழர் தாயகமெங்கும் அனுஷ்டிக்க தமிழ்த் தேசிய சக்திகளோடு கலந்தாலோசித்து ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்புஅழைப்பு 15

# தலைவர் பிரபாகரன் வீரமரணமடைந்து விட்டார்

## பிரபாகரனின் சகோதரர் இந்திய ஊடகத்துக்கு செவ்வி

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன், அவரது மனைவி மற்றும் மகள் உள்ளிட்ட குடும்பத்தினர் 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் வீரமரணமடைந்துவிட்டார்கள் என்பதை நூறு வீதம் தாங்கள் நம்புவதாக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் சகோதரர் மனோகரன் தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)



### காங்கேசன்துறை – நாகை

# கப்பல் சேவை மீண்டும் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை - நாகப்பட்டினத்துக்கிடையிலான பயணிகள் கப்பல் சேவை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 13ஆம் திகதி கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில் சில காரணங்களால் இன்று வரை ஒத்தி 15

# இளம் குடும்பப் பெண் தாவடியில் மர்ம மரணம்

## உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - தாவடி பகுதியில் இளம் குடும்பப் பெண் ஒருவர் படுக்கையில் இருந்து சடலமாக நேற்று மீட்கப்பட்டார்.

காளிகோவில் வீதி, தாவடி தெற்குப் பகுதியை சேர்ந்த ஜென்சியா சிவசூரியன் (வயது-31) என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு 15

# மூதூரில் நினைவேந்தலுக்கான தடை நீதிமன்றத்தால் நீக்கம்

## கைதான நால்வரும் விடுவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை சம்பூர் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிய மூன்று பெண்கள் உட்பட நால்வரை விடுவிக்க மூதூர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்க விதிக்கப்பட்டிருந்த தடையையும் நீக்க நீதிமன்றம் உத்தரவிட் 15

# தமிழர்கள் மிகக் கடினமான சூழலில் உள்ளார்கள் என்பதை ஏற்கின்றோம்

### தொடர்ந்து அரசுக்கு அழுத்தம் கொடுப்போம் தமிழ் எம்.பிக்களிடம் அமெரிக்கத் தூதுவர்



(யாழ்ப்பாணம்)

தமிழர்களாகிய நீங்கள் தற்போது மிகவும் கடினமான சூழலில் உள்ளீர்கள் என்பதனை நாம் ஏற்கின்றோம் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித் 04

# கொக்குத்தொடுவாய் அகழ்வுக்கு நிதி கிடைத்தது

## ஜூலை 4 அகழ்வு மீளவும் ஆரம்பம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வாய்வுகள் ஜூலை 4 ஆம் திகதி மீள இடம்பெறுமென முல்லைத்தீவு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கு நேற்று வியாழக்கிழமை விசா 15

# 3 இந்திய மீனவர்கள்

## மாதகலில் கரையொதுங்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மாதகல் புளியந்தரை கடற்கரையில் படகுடன் மூன்று இந்திய மீனவர்கள் 15

### முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைத்து

# அமைதியான முறையில் பிரார்த்தனை செய்யுங்கள்



## கலாநிதி ஆறு.திருமுருகன்

(கொழும்பு)

முள்ளிவாய்க்கால் அவலத்தில் உயிர் நீத்த அனைத்து ஆத்மாக்களையும்நினைந்து அமைதியான முறையில் பிரார்த்தனை செய்யுங்கள் என அகில 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு

திருமதி அருள்நிதி நேசரஞ்சன்



சேவை விபரம்

**முகாமைத்துவ உதவியாளர்**
18.05.1992 - RDHS அலுவலகம் - யாழ்ப்பாணம்
04.02.2005 - நகர சபை - பருத்தித்துறை
**அபிவிருத்தி உத்தியோகத்தர்**
27.10.2005 - பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய் (Land department)
04.04.2007 - பிரதேச செயலகம் - கரவெட்டி (Land department)
01.10.2009 - பிரதேச செயலகம் - கரைச்சி - கிளிநொச்சி (தற்காலிக இடமாற்றம்)
27.12.2010 - பிரதேச செயலகம் - கரவெட்டி
03.04.2015 - கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் பருத்தித்துறை.
01.02.2021 - வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி

வலயக்கல்வி அலுவலகம் வடமராட்சியில் அபிவிருத்தி உத்தியோகத்தராக பணியாற்றி சுயவிருப்பின் பேரில் சேவையில் இருந்து 17.05.2024ஆம் திகதி இன்று ஓய்வுபெற்றுச் செல்லும் திருமதி **அருள்நிதி நேசரஞ்சன்** அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு ஓய்வுகாலத்தில் ஆரோக்கியத்துடன் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: ஊழியர் நலன்புரிச் சங்கம், வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி

(C-0383)


## தலைவர்...

இந்த நிலைப்பாட்டை மக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.இந்தியாவின் தந்தி டிவிக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்படி, யாரோ ஒரு பெண் இங்கு வந்து நான்தான் துவாரகா என அறிவிப்பதுடன், இது போன்ற வரலாற்றை மாற்றியமைக்கும் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்படுகின்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அப்படி அவர்கள் உயிருடன் இருப்பதாக யாரும் கூறினால் அவர்களை அழைத்து வர முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒருவேளை, தலைவர் பிரபாகரன் உயிருடன் இருந்திருந்தால் அவர் 14 வருடங்கள் குடும்பத்தை விட்டு விலகியிருக்க மாட்டார். அவர் வேறு எந்த நாட்டிலும் சொகுசு வாழ்க்கை வாழக்கூடியவர் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் உள்ளிட்ட குடும்பத்தாருக்கு இறுதி அஞ்சலி நிகழ்வு ஒன்றை செய்து, அவர்கள் தங்களுடைய நாட்டிலேயே இறுதி மூச்சை விட்டதை உலக மக்களுக்கு அறிவிப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, எதிர்வரும் 18 ஆம் திகதி டென்மார்க்கில் இந்த இறுதி அஞ்சலி நிகழ்வை நடத்துவதற்கு தாங்கள் ஏற்பாடு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இனியும் தலைவரின் பெயரை பயன்படுத்தி பணம் பெற வேண்டாம் என அனைவரிடமும் கேட்டுக்கொள்வதாகவும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் சகோதரர் மனோகரன்மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-7.10)


லங்கா மஹால் பிறைவேட் லிமிட்ட்
(உள்நாட்டு வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை)

**வேலையாள் தேவை (ஆண்,பெண்)**

A/L தகைமையுடைய (கணினி அறிவு அடிப்படை) வேலையாள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

65, 2nd cross street, Vavuniya.

077 839 3974

(776)

## பத்திரிநாத் கேதாரநாத் யாத்திரை இமயமலைப் பயணம்

நாட்கள் 12 | ஆரம்பம் 15.06.2024

சென்னை, டெல்லி, ஹரித்துவார், ரிஷிகேஸ், பார்கோட், யமுனோத்திரி, யமுனா ஆற்றின் முதல் இடம் கங்கோத்திரி கங்கை உற்பத்தியாகுமிடம், கங்கா நதி வென்னீர் ஊற்றுக்கள், உத்திரகாசி விநாயகர் தலை கொய்த இடம், குப்தகாசி பாண்டவர் வழிபட்ட சிவன் கோவில் ஸ்ரீ நகர், பத்திரிநாத் திவ்ய தேசம், கேதார் ஜோதி லிங்கம் ஆதி சங்கரர் ஜீவசமாதி, தேவப்பிரயாகை, ஜோசி மடம் நரசிம்மசுவாமி, திவ்யதேசம், மானுசரஸ்வதி நதி தோற்றுமிடம், இந்தியா - சீனா எல்லை மற்றும் பல இடங்களில் தரிசனம் பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது **சேவை: இருவழி விமானக் கட்டணம், யாத்திரை முழுவதும் AC பஸ், உடன் சமைத்த சூடான சுவையான மூன்று வேளை உணவு, இரண்டு பேருக்கு ஒரு குளியலறை இணைந்த அறைகள், காப்பி, ரீ, குடிநீர், உட்பட சென்னையில் ஒரு நாள் சொப்பிங்.**

(769)

ஸ்ரீரங்கநாதன் 077 768 0102
ராஜன் 077 736 2154

## நாக அதிஷ்ட சுரபி
## கனகலிங்கம் திலகவதி NLB/ DLB

16.05.2024 அபிவிருத்தி லொத்தர் சபையின் கப்ருக லொத்தர் சீட்டிழுப்பில் முதல் பரிசாக **20 லட்சம் ரூபாய்** வெல்லப்பட்டுள்ளது.10.05.2024 அதகோடிபதி சீட்டிழுப்பில் முதல் பரிசாக **20 இலட்சம் ரூபாய்** ஒன்றும் வெல்லப்பட்டுள்ளது.

14.05.2024 அதசம்பத லொத்தர் சீட்டிழுப்பில் **2 1/2 இலட்சம் ரூபாயும்** 16.05.2024 **50 ஆயிரம் ரூபாயும்** வெல்லப்பட்டுள்ளது.

இந்த மூன்று முதல் பரிசில்களும் யாழ்ப்பாண முகவரான கனகலிங்கம் திலகவதி ஊடாக வெற்றி கொள்ளப்பட்டுள்ளது.

**அமுதசுரபி நயினையில் தொடரும்**
**அதிஷ்ட சுரபி யாழில் தொடரும்**

077 603 1723

(C-0386)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சங்கீத பாட ஆசிரியர்
திருமதி **கார்த்திகாயினி ராகுலன்**
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி **சந்திராதேவி யோகேஸ்வரன்**
(ஓய்வு பெற்ற முன்னாள் சங்கானை சிவபிரகாச வித்தியாலய அதிபர்)



அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ஏழாலை மகா வித்தியாலயம்

(C-0385)

# NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD JAFFNA

## 2026 A/L கணித உயிரியல் பிரிவுகள்
நேரடி வகுப்புக்கள் மற்றும் நிகழ்நிலை வகுப்புக்கள்

| தமிழ்மொழி மூலம் | ENGLISH MEDIUM |
|---|---|
| **PHYSICS** | **PHYSICS** |
| திரு. G.பிரபா | MR.M.KUGANESWARAN |
| திரு. N.கபிலன் | MR.R.RAAKULAN |
| திரு. R.ராகுலன் | |
| **CHEMISTRY** | **CHEMISTRY** |
| திரு. G.BENO | MR.G.BENO |
| திரு. V.K.நந்தா | MR.V.K.NANTHA |
| **BIOLOGY** | **BIOLOGY** |
| திரு. V.S. குணசீலன் | MR.V.S.GUNASEELAN |
| திரு. K.இராகவன் | |
| **COM.MATHS** | **COM.MATHS** |
| திரு. P. செந்தில்நாதன் | MR.P.SENTHILNATHAN |
| திரு. V.S. சிவகரன் | MR.V.S.SIVAKARAN |

**அனுமதிகள் வழங்கப்படுகின்றன.**

**ஆரம்பம் : 19.05.2024 (Sunday)**

நிகழ்நிலை வகுப்புகளுக்கு சகல மாவட்டங்களிலும் இருந்து இணைந்து கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : 076 569 3006, 076 566 3006, 077 791 7611

(C-0380)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு காரணமானவர்கள் இன்னமும் உயர் பதவிகளில்

## தமிழர்கள் தொடர்ந்தும் பாதுகாப்பற்ற நிலையில்

### அவுஸ்திரேலிய செனட்டர்

(கன்பெரா)

**முள்ளிவாய்க்கால் படுகொலைகளில் ஈடுபட்டவர்கள் அரசாங்கத்திலும் இராணுவத்திலும் உயர் பதவிகளில் உள்ளனர். ஆனால் இன்றுவரை தமிழர்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றனர் என அவுஸ்திரேலியாவின் கிறீன்ஸ் கட்சியின் செனட்டர் தெரிவித்துள்ளார்.**



முள்ளிவாய்க்கால் படுகொலை இடம்பெற்று 15 வருடங்களாவதை குறிக்கும் நிகழ்வு சிட்னியின் டவுன் கோலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தமிழீழத்திற்கும் இலங்கைக்கும் இடையில் இடம்பெற்ற யுத்தத்தின் இறுதித் தருணங்களில் மே 2009 இல் இடம்பெற்றது.

யுத்த சூன்ய வலயம் தாக்கப்பட்டதுடன் ஆயிரக்கணக்கான தமிழர்கள் - செஞ்சிலுவை சங்கத்தின் பாதுகாப்பின் கீழ் இருந்தவர்கள் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

170,000தமிழர்கள் அந்த ஈவிரக்கமற்ற யுத்தத்தின் இறுதிக் காலங்களில் கொல்லப்பட்டனர்.

இந்த குற்றங்களிற்கு காரணமானவர்கள் இன்றும் இலங்கை இராணுவத்திலும் அரசாங்கத்திலும் உயர் பதவிகளில் தொடர்ந்தும் நீடிக்கின்றனர்.இன்றுவரை தமிழர்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதோடு ஒடுக்கு முறையை எதிர்கொள்கின்றனர்.

பலர் அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

எங்கள் தேசம் தனது இதயத்தை அவர்களிற்காக திறக்க வேண்டும். அவர்களிற்கு நிரந்தர பாதுகாப்பை வழங்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-6)

## முள்ளிவாய்க்கால் கஞ்சி; பொலிஸாரின் அராஜகத்திற்கு எதிராக கொதித்தெழுந்த சிங்கள பெண்மணி



(திருமலை)

திருகோணமலை சம்பூர் பகுதியில், முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரித்த பெண்கள் கைது செய்யப்பட்ட சம்பவம் தற்போது மக்கள் மத்தியில் பாரிய அதிர்வலைகளை தோற்றுவித்துள்ளது.

சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் மற்றும் அரசியல்வாதிகள் என பல்வேறு தரப்பினரும் தங்களது கண்டனங்களையும் பொலிஸாரின் இது போன்ற நடவடிக்கைக்கு தங்களது எதிர்ப்புக்களையும் வெளியிட்டு வருகின்றனர்.

தமிழ் சமூகம் மாத்திரம் இன்றி சிங்கள தரப்பினரும், சமூக செயற்பாட்டாளர்களும் இந்த சம்பவத்திற்கு தங்களது கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

பொலிஸாரின் இது போன்ற அராஜக செயற்பாடுகள் தொடரும் எனில், முழு நாடும் ஒன்றிணைந்து தங்களது எதிர்ப்பினை தெரிவிப்போம் என்று பெரும்பான்மை இன பெண் மணி ஒருவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள் ளார்.

மேலும், பலர் இவ்வாறு தங்களது உளக்குமுறல்களை வெளிப்படுத்தியுள்ளனர். (நி-6)

## ஜனாதிபதி வடக்கு விஜயம் பலப்படுத்தப்படும் பாதுகாப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்மாதம் இறுதி வாரத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக தெரிய வந்துள்ளது.

ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினர் தற்போதைக்கு, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு விஜயம் செய்து,அவரின் விஜயம் தொடர்பான பாதுகாப்பு நிலைமைகளை அவதானித்து வருகின்றனர்.

ரணிலின் யாழ்.விஜயம் குறித்து மேலும் தெரியவருகையில்,

கிளிநொச்சி மாவட்டத்திற்கு வருகை தரும் ஜனாதிபதி ரணில் அங்கு புதிதாக அமைக்கப்பட்ட வைத்தியசாலை கட்டடம் ஒன்றை திறந்து வைத்த பின்னர் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது யாழ்.போதனா வைத்தியசாலையிலும் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடம் ஒன்றை திறந்து வைக்கவுள்ளார்.

மேலும் யாழ். விஜயத்தின் போது வலி வடக்கு பகுதியில் ஒட்டகப்புலத்துக்குச் செல்லும் பிரதான பாதையினையும் உத்தியோபூர்வமாக மக்களிடம் கையளிக்கும் நிகழ்வும் இடம் பெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

## உலக நீர் உச்சி மாநாட்டில் பங்கேற்கும் ஜனாதிபதி

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் நடைபெறவுள்ள 10ஆவது உலக நீர் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவின் அழைப் பின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளார்.

இதன்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை அந்த நாட்டிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள மாநா ட்டின் உயர்மட்டக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விசேட உரையொன்றை ஆற்றவுள்ளதாகவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

10 ஆவது உலக நீர் உச்சி மாநாட்டின் உயர்மட்ட கூட்டம் இந்தோனேசியாவின் பாலி நகரில் எதிர்வரும் 20 ஆம் முதல் 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முள்ளிவாய்க்கால் கஞ்சி சிரட்டையில் பருகிய இராணுவம்



(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு, நேற்றும் யாழ். உள்ளிட்ட பகுதிகளில் கஞ்சி விநியோகிக்கும் நிகழ்வு மற்றும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது, பொதுமக்கள் மட்டுமன்றி வீதியில் பயணித்த இராணுவத்தினரும் முள்ளிவாய்க்கால் கஞ்சியினை சிரட்டையில் பெற்று பருகியமை விசேட அம்சமாகக் கருதப்படுகிறது. (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# வான் மேகம் பூ பூவாய் தூவும்...

## வானம் முத்துக்கள் சிந்தி ஹைதராபாத்தை வாழ்க என்றது
## பிளே ஓப் அழைத்துச் சென்றது



ஹைதராபாத் - குஜராத் அணிகள் இடையிலான ஐ.பி.எல்., போட்டி மழை காரணமாக இரத்தானது.

இந்தியாவில் ஐ.பி.எல்., தொடரின் 17ஆவது சீசன் நடக்கிறது.

நேற்று ஹைதராபாத்தில் நடக்க இருந்த லீக் போட்டியில் ஹைதராபாத் - குஜராத் அணிகள் மோத இருந்தன.

இதில் வென்றால், 16 புள்ளியுடன் "பிளே ஓப்" செல்லலாம் என்ற நிலையில் இருந்தது ஹைதராபாத் அணி.

ஆனால் தொடர்ச்சியான மழை காரணமாக போட்டி தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது.

மழை நிற்கும் பட்சத்தில் ஓவர்கள் குறைக்கப்பட்டு போட்டி நடக்க வாய்ப்பு இருந்தது.

ஆனால் மழை தொடர்ந்தது. மைதானத்தில் அதிகமான நீர் தேங்கியது. வேறு வழியில்லாத நிலையில் போட்டியை இரத்து செய்வதாக நடுவர்கள் அறிவித்தனர்.

**மூன்றாவது அணி**

ஹைதராபாத், குஜராத் அணிகளுக்கு தலா ஒரு புள்ளி பகிர்ந்து வழங்கப்பட்டன. இதனால் 15 புள்ளிகளுடன் (13 போட்டிகள்) மூன்றாவது அணியாக ஹைதராபாத், "பிளே ஓப்" சுற்றுக்கு முன்னேறியது. ஏற்கெனவே கொல்கத்தா (19), ராஜஸ்தான் (16) அணிகள் அடுத்த சுற்றுக்கு முன் னேறி விட்டன.



டில்லி அணி 14 போட்டியில் 14 புள்ளி பெற்ற போதும், மோசமான ரன் ரேட் (-0.377) காரணமாக அடுத்த சுற்று வாய்ப்பை இழந்தது.

### சென்னை எப்படி?

மீதமுள்ள ஒரு இடத்தை பிடிக்க, பட்டியலில் 4, 6ஆவது இடங்களிலுள்ள சென்னை (13 போட்டி, 14 புள்ளி), பெங்களூரு (13ல் 12) அணிகள் இடையில் போட்டி காணப்படுகிறது. நாளை இரு அணிகள் மோதும் போட்டி பெங்களூருவில் நடக்க உள்ளது. இதில் சென்னை வென்றால் 16 புள்ளியுடன் "பிளே ஓப்" செல்லும். மாறாக பெங்களூரு வெற்றி பெற்றால் இரு அணிகளும் தலா 14 புள்ளி பெறும். ரன் ரேட் அடிப்படையில் முந்தும் அணி, அடுத்த சுற்றுக்கு தகுதி பெறும்.

# கிண்ணம் வென்றது பாகிஸ்தான்

## அயர்லாந்துக்கு மீண்டும் ஏமாற்றம்



பாபர் ஆசம், ரிஸ்வானின் சிறப்பான துடுப்பாட்டத்தினால் மூன்றாவது "ரி20" போட்டியில் 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி, தொடரை 2-1 எனக் கைப்பற்றி கிண்ணம் வென்றது.

அயர்லாந்து சென்ற பாகிஸ்தான் அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட "ரி20" தொடரில் பங்கேற்றது.

முதலிரண்டு போட்டிகளின் முடிவில் தொடர் 1-1 என சமநிலையில் இருந்தது.

இந்நிலையில் மூன்றாவது போட்டி டப்ளினில் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

அணித் தலைவர் லார்கன் டக்கர் (73), ஆன்டி பால்பிர்னி (35), ஹாரி டெக்டர் (30*) கைகொடுக்க அயர்லாந்து அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பில் ஷாஹீன் ஷா அப்ரிடி 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணிக்கு மொகமட் ரிஸ்வான் (56), அணித் தலைவர் பாபர் ஆசம் (75) நம்பிக்கை அளித்தனர்.

பாகிஸ்தான் அணி 17 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

ஆசம் கான் (18), இமாத் வாசிம் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஆட்ட நாயகன் விருதை ஷாஹீன் ஷா அப்ரிடி வென்றார்.

## தமிழர்கள்...

துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அமெரிக்கத் தூதுவருக்கும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் விசேட சந்திப்பு நடைபெற்றுள்ள நிலையிலேயே அமெரிக்கத் தூதுவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், த.சித்தார்த்தன், இ.சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

மேற்படி சந்திப்பில் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் விவகாரம் தொடர்பிலேயே அமெரிக்கத் தூதுவரால் அதிக அக்கறை செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவுக்கு எதிரான வழக்கு விடயம் குறித்து ஜூலி சங் வினவியுள்ளார்.

இந்நிலையில், பொது வேட்பாளர் விடயத்தில் கூட்டமைப்பின் சார்பில் கலந்துகொண்ட மூவரும் மூன்று நிலைப்பாடுகளில் காணப்பட்டுள்ளனர்.

"ஜனாதிபதித் தேர்தலில் முன்பு சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாஸ என வாக்களித்து ஏமாற்றமே அடைந்தோம். அதனால் பொது வேட்பாளர் வேண்டும். இதனைத் தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைக்கும் களமாகவும் பயன்படுத்தலாம்" என்று பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், "பொது வேட்பாளர் விடயம் பொருத்தமற்ற ஒன்று என்பதே தனது நிலைப்பாடு. இருப்பினும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் பிரஸ் தாபித்து ஓர் தீர்மானத்தை எட்ட முடியும்" என பாராளுமன்ற உறுப்பினர் இ.சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளபோதும் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மௌனம் காத்துள்ளார்.

இதேநேரம், "நில விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடயம், பொறுப்புக் கூறல், மனித உரிமை போன்ற விடயங்களில் நாங்கள் பல விடயங்களை இலங்கை அரசிடம் கூறியுள்ளோம். அவர்கள் செய்வதாக இல்லை.

இந்நிலையில், மிகவும் கடினமான சூழலில் தற்போது நீங்கள் (தமிழர்கள்) உள்ளீர்கள் என்பதனை ஏற்கின்றோம். இருப்பினும் நாம் தொடர்ந்தும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்போம்" என்று அமெரிக்கத் தூதுவர் பதிலளித்துள்ளார்.

மேலும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவுக்கு எதிரான வழக்கு விடயம் குறித்து அமெரிக்கத் தூதுவர் வினவியபோது, "அதனைத் தனிப்படப் பேசுவதே பொருத்தமானது." என்று பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழினப் படுகொலை வாரத்தின் ஐந்தாவது நாளான நேற்று புதுக்குடியிருப்பு கோம்பாவில் இளைஞர்களின் ஏற்பாட்டில் கோம்பாவில் கிராமத்தில் இறுதி உயிரை காப்பாற்ற உயிர்காத்த உணவான முள்ளிவாய்க்கால் கஞ்சியானது வழங்கி வைக்கப்பட்டது. (படம்: சதீஸ்)

# மன்னாரை வந்தடைந்த நினைவேந்தல் ஊர்தி



(மன்னார்)

தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஊர்தி பவனி நேற்று திங்கட்கிழமை மன்னாரை வந்தடைந்தது.

கடந்த 12 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பமானது. இதன் போது வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் குறித்த நினைவேந்தல் ஊர்தி சென்று முள்ளிவாய்க்கால் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் முள்ளிவாய்க்கால் வாரத்தின் 5 ஆவது நாளாக குறித்த ஊர்தி மன்னாரை வந்தடைந்ததையடுத்து பேருந்து நிலையத்திற்கு முன் அஞ்சலி இடம்பெற்றது.

தமிழின படுகொலைக்கு நீதி கோரி இடம்பெற்ற ஊர்திப் பவனியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் கலந்து கொண்டு மலர் தூவி தீபம் ஏற்றி உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர். (நி-6-285)

# அம்மாச்சி உணவகம் கோப்பாயில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் நோக்குடன் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அம்மாச்சி பாரம்பரிய உணவகத்தை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் நேற்று திறந்து வைத்தார்.

இதன்போது வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவும் வகையில், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஒதுக்கீட்டின் கீழ் 10 இலட்சத்து அறுபதாயிரம் ரூபா பெறுமதியான 12 தையல் இயந்திரங்களும் பயனாளிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டது. (நி-6)

# உயர்தர பரீட்சை பெறுபேறுகள் இம் மாத இறுதிக்குள்

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இம்மாத இறுதிக்குள் வெளியாகும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைகள் திணைக்களத்தில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதிக் கட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தற்போது நிறைவடைந்துள்ள சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் இன்னும் நான்கு மாதங்களின் பின்னர் வெளியிடப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

லங்கா மஹறால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (354)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615671 9
MoneyGram Ria
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

உ
அந்தியேட்டி அழைப்பிதழ்

கடந்த 23.04.2024 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கு

அமரர்.செல்வராசா சர்வேஸ்வரன்



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 17.05.2024 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 19.05.2024 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்) (0065)

சிறுப்பிட்டி மேற்கு,
இராசவீதி.

தகவல்
குடும்பத்தினர்.
076 838 8405

# இராசிபலன்

17.05.2024
வைகாசி 04, வெள்ளிக்கிழமை,
நவமி முற்பகல் 10.44 மணிவரை

பூசம் முன்னிரவு 10.53 மணிவரை
சுபநேரம் 5.53-7.23 மணிவரை
இராகுகாலம் 10.23-11.53 மணிவரை

சந்திராஷ்டமம் - பூராடம், உத்தராடம்

வளவன்

**மேஷம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள்.

**கடகம்** தொலைதூரத்திலிருந்து சுபசெய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், ஆடம்பரப் பொருட்களில் நாட்டம் கூடும், செல்வ நிலை உயரும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்** வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, பிரயாண பயமுண்டு, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் ஆதாயம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், வழிபாடு முன்னேற்றம் தரும், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்** குடும்பப் பொறுப்புக்கள் சற்று அதிகரிக்கும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், அடுத்தவர் நலனில் அக்கறை கூடும், திடீர் பயணம் உருவாகும்.

**விருச்சிகம்** இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள், விருந்தினர் வருகையுண்டு, பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கும்பம்** புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இனிய அனுபவங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், பாகப் பிரிவினைகள் சுமூகமாக அமையும், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்.

**தனுசு** வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதி கிடைக்கும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மீனம்** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், போசன சுகமுண்டு.

நம்மை பாவம் செய்யாமல் தடுப்பவன் தான் நண்பன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரு உணவகங்களுக்கு சீல்

(சாவகச்சேரி)

பூநகரி-முழங்காவில் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரண்டு உணவு கையாளும் நிலையங்களுக்கு சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.

முழங்காவில் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரண்டு உணவு கையாளும் நிலையங்களுக்கு கிளிநொச்சி நீதிமன்றத்தின் கட்டளைக் கமைய சீல்வைத்து மூடப்பட்டுள்ளது.

அண்மையில் பூநகரிப் பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட உணவுப் பாதுகாப்புச் சுற்றிவளைப்பில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவு கையாளும் நிலையங்களுக்கெதிராக முழங்காவில் பொது சுகாதார பரிசோதகரால் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது மூன்று உணவு கையாளும் நிலையங்களுக்கெதிராக இனங்காணப்பட்ட குற்றங்களுக்காக அறுபத்தையாயிரம் ரூபாய் தண்டப்பணம் அறவிடப்பட்டதோடு- அதிக சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரண்டு உணவகங்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய பூரணமாக சீர்செய்யப்படும் வரை பொது சுகாதார பரிசோதகர்களால் சீல்வைத்து மூடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

# உடுத்துறை பெண் படுகொலை
# கணவன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு பகுதியில் குடும்பப் பெண்ணொருவர், கடந்த வெள்ளிக்கிழமை கழுத்து நெரித்து படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் பெண்ணின் கணவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உடுத்துறை வடக்கு, தாளையாடியை சேர்ந்த 44 வயதுடைய ஜெகசீலன் சங்கீதா என்பவர் வீட்டின் கழிவறைக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த நீர் நிரப்பப்பட்ட கொள்கலனினுள் (பரல்) தலை மூழ்கிய நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

அது தொடர்பில் மருதங்கேணி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு, பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் உடற்கூற்று பரிசோதனைக்காக ஒப்படைத்தனர்.

உடற்கூற்று பரிசோதனையில் துணி ஒன்றினால், பெண்ணின் கழுத்தை நெரித்து படுகொலை செய்யப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் பெண்ணின் கணவரை நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்துள்ளனர்.

கணவன் - மனைவிக்கு இடையில் அடிக்கடி கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு, தர்க்கம் ஏற்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பெண்ணின் கணவரை பொலிஸார் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர். (நி-6-33)

# பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் யாழ்.மருத்துவபீடம் முன்பாக கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் நேற்று வியாழக்கிழமை கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ஒன்று கூடிய பல்கலைக்கழக ஊழியர்கள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் திருநெல்வேலி சந்திவரை பேரணியாக சென்று பல்கலைக்கழகத்தை மீண்டும் அடைந்தது.

இதன்போது அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனம், பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில் நடைபெற்றுவரும் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தின் ஒரு பகுதியாக அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும், கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

# காணவில்லை



(யாழ்ப்பாணம்)

வைத்திலிங்கம் கனகலிங்கம் என்ற 82 வயதுடைய வயோதிபரை கடந்த சில நாட்களாக யாழ்.நகரில் காணவில்லை. இவரை கண்டவர்கள் 077 138 7596, 071 999 9306, 074 090 9597 என்ற தொலைபேசி இலக்கங்களிற்கு அறியத்தரவும். (நி-6)

# கெருடாவில் பகுதியில் 2 பவுண் சங்கிலி அறுப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெருடாவில் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் ஆலய குருக்கள் ஒருவருடைய இரண்டு பவுண் சங்கிலியை கொள்ளையர்கள் அறுத்துச் சென்றிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குருக்களுடைய வீட்டிற்குச் சென்ற இருவர் சாதகம் எழுத வேண்டும் எனக் கூறி குருக்களை நெருங்கி அவருடைய கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பித்திருப்பதாக தெரிய வருகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)

# கல்வியங்காட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி





(யாழ்ப்பாணம்)

இனப்படுகொலைப் போரின் வலிகளை தலைமுறைகளிற்கும் கடத்தும் வகையில் தமிழர் தாயகமெங்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சிபரிமாறும் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று புதன்கிழமை கல்வியங்காடுச் சந்தியில் வழங்கி வைக்கப்பட்டது. (நி-6-33)



யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காலிங்க ஜெயசிங்கவுக்கும் யாழ்.மாவட்ட பதில் மாவட்ட செயலாளர் ம.பிரதீபனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் மாவட்ட செயலாளரின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இச் சந்திப்பின் போது யாழ். மாவட்டத்தின் அண்மைக்கால நிலவரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

# எதிர்வரும் 20 ஆம் திகதி வரை வடக்கு- கிழக்கில் மழை தொடரும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைக்கும் மழை வீழ்ச்சி எதிர்வரும் 20 ஆம் திகதி வரை தொடர வாய்ப்புள்ளது என யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி இலங்கைக்கு தெற்கே வங்காள விரிகுடாவில் உருவாகிய காற்றுச் சுழற்சி தற்போது தீவிரமடைந்துள்ளமையால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை மழை தொடர வாய்ப்புள்ளதுடன் குறிப்பாக 18,19 ஆம் திகதிகளில் கன மழை கிடைப்பதற்கான வாய்ப்புள்ளது.


அதேவேளை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு பின்னர் கிழக்கு வங்காள விரிகுடாவில் மேலுமொரு காற்றமுக்கத் தாழ்வு நிலை உருவாகவுள்ளது என மேலும் தெரிவித்தார். (நி-6-33)



பேராசிரியர் சு. வித்தியானந்தன் பெயரிலான அரங்கு, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர். ஸ்ரீ. பிரசாந்தன் தலைமையில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. (படம்-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரஷ்யா விரையும் அரச தூதுக்குழு



(கொழும்பு)
இலங்கையிலிருந்து விரைவாக ரஷ்யாவிற்கு உயர்மட்ட அரச தூதுக்குழுவொன்றை அனுப்புமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற விசேட ஊடக வியலாளர் சந்திப்பில் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய இதனைத் தெரிவித்தார்.

ரஷ்யாவுக்குச் சென்றவர்களின் தகவல்களை சேகரிக்க பாதுகாப்பு அமைச்சின் உடனடி தொலைபேசி இலக்கம் தற்போது செயற்படுவதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்ய -உக்ரைன் போரில் ஈடுபடுவதற்காக சட்டவிரோதமாகச் சென்ற இலங்கையர்கள் 16 பேர் உயிரிழந்துள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் நேற்றுமுன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

யுத்தத்தில் இணைந்த இலங்கையர்கள் தொடர்பில் இதுவரை 288 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ரஷ்ய உக்ரைன் போருக்குச் சென்ற இலங் கையர்கள் தொடர்பில் ரஷ்ய தூதுவரிடம் கோரிக்கைகளை முன்வைத்ததாக பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார். (நி-6)

# நினைவேந்தல் தடுப்பு

## இலங்கையில் தமிழர்களுக்கு இடமில்லை என்பதையே காட்டி நிற்கிறது

### யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)
நினைவுகூரலினைத் தடுப்பதற்கான அரசின் முயற்சிகள் அனைத்தும் போரில் இறந்தவர்களை அர்த்தமுள்ள முறையில் நினைவுகூருவதற்கு இலங்கையிலே தமிழர்களுக்கு இடமில்லை என்பதனையே எடுத்துக்காட்டுகின்றன. மேலும் இவ்வாறான கடும் போக்கான நடவடிக்கைகள் தமிழர்களுக்கு எதிராகத் தொடரும் அரசின் இன விரோதத்தையும் வெளிக் காட்டுகின்றன என யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் வடக்குக் கிழக்கில் இறுதிப் போர் நினைவேந்தல் மீதான அரச அடக்குமுறை குறித்த யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இலங்கை அரசு மற்றும் அதன் சட்ட அமுலாக்க இயந்திரங்கள் இந்த வாரம் நடைபெற்று வரும் நினைவேந்தல் நிகழ்வுகளைக் கட்டுப்படுத்துவது, அடக்குவது மற்றும் தடுப்பது குறித்து தனது ஆழ்ந்த கரிசனையினையும், கவலையினையும் ஆசிரியர் சங்கம் இந்த அறிக்கையூடாக வெளிப்படுத்துகிறது.

பல தசாப்தங்களாகத் தமிழ் மக்கள் அனுபவித்த இன ஒடுக்குமுறை மற்றும் இன வன்முறைக்கு இலங்கை அரசின் சட்ட மற்றும் நீதித்துறைக் கட்டமைப்புகளிடம் இருந்து எந்த நீதியையும் பெற முடியாது என்ற தமிழ் சமூகத்தின் நீண்டகாலப் பார்வையினை இந்தச் சம்பவங்கள் மீண்டும் உறுதிப்படுத்துவனவாக அமைகின்றன.

கடந்த பதினான்கு ஆண்டுகளில் நடந்ததைப் போலவே, இந்த ஆண்டிலும் மே மாதத்திலே வடக்குக் கிழக்கிலும் அதற்கு அப்பாலும் உள்ள தமிழர்கள் போரின் போது இறந்தவர்களை நினைவுகூர்கின்றனர். வடக்குக் கிழக்கு முழுவதும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. முள்ளிவாய்க்கால் வன்முறையை நேரில் அனுபவித்தவர்கள் உள்ளடங்கலாக தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்களால் இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

போரில் இறந்த தங்கள் உறவுகளையும், இழப்புக்களைச் சந்தித்த பரந்துபட்ட தமிழ் சமூகத்தையும் நினைவுகூர அனைவருடனும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் தோளோடு தோள் நின்று ஆதரவு அளிக்கும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6-33)

# முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி மன்னாரில் வழங்கி வைப்பு




(மன்னார்)
மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளை தேடும் சங்கத்தின் ஏற்பாட்டில்

மன்னார் பேருந்து தரிப்பிடத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை காலை 10 மணியளவில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளை தேடும் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன் பொழுது மன்னார் மாவட்டத்தில் யுத்த காலத்தில் தங்கள் பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், முப்படையினரால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்கள், உறவினர்களால் இணைந்து மன்னார் பேருந்து தரிப்பிடத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி மக்களுக்கு வழங்கப்பட்டது. (நி-6-285)

# இந்த வருடம்

## அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு இல்லை

(கொழும்பு)
அரச ஊழியர்களுக்கு இந்த வருடம் சம்பள உயர்வு வழங்கப்பட மாட்டாது என ஜனாதிபதி அமைச்சரவைக்கு அறிவித்துள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை அபிவிருத்தி பிரிவுக்குட்பட்ட பல ஊழியர் சபைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்க அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொழிற்சங்க பிரதிநிதிகளினால் முன்வைக்கப்பட்ட பல பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதுடன், இந்த வருடமும் சம்பள அதிகரிப்பை வழங்குமாறு அனைத்து தொழிற்சங்க பிரதிநிதிகளும் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் அடுத்த வருடம் அரசாங்க ஊழியர்களுக்கு மீண்டும் சம்பள உயர்வு வழங்கப்படும் எனவும், இந்த வருடமும் சம்பள அதிகரிப்பு செய்யப்படுமானால் நாடு மீண்டும் பொருளாதார வீழ்ச்சியை சந்திக்க நேரிடும் எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை இந்த கலந்துரையாடலில் கால்நடை மருத்துவர்கள் சங்கம், கால்நடை அபிவிருத்தி ஆலோசகர்கள் சங்கம் மற்றும் கால்நடை அபிவிருத்தி துறை பணியாளர்கள் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# கல்விசாரா ஊழியர்களின் கொடுப்பனவு தொடர்பில் இந்த வாரம் தீர்மானம் எடுக்கப்படும்-சுரேன் ராகவன்

(கொழும்பு)
திறைசேரிக்கு கிடைத்துள்ள வரி வருமானத்தை கருத்தில் கொண்டு கல்விசாரா ஊழியர்களின் கொடுப்பனவுகள் குறித்து இந்த வாரத்தில் தீர்மானமொன்று எடுக்கப்படும் என உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்காக வருடாந்தம் சுமார் 1.3 பில்லியன் ரூபாய் செலவாகும் என தற்போது மதிப்பிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்கள் ஆரம்பித்துள்ள பணிப்பகிஷ்கரிப்பு தொடர்கிறது.

அவர்களின் கோரிக்கைகளுக்கு அரசு சாதகமான பதில் வழங்காமையே பணிப்பகிஷ்கரிப்பிற்கு காரணமாகும் என அவர் தெரிவித்தார். (நி-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## விபத்தில் சிக்கிய கப்பலுக்குள் 50 நாளாக தவிக்கும் பணியாளர்கள்



(வோஷிங்டன்)
அமெரிக்க பால்டிமோரில் தொழில்நுட்ப பிரச்சினையால் விபத்துக்குள்ளாகிய தில் சரக்கு கப்பலில் உள்ள பணியாளர்கள் தொடர்ந்தும் கப்பலிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

மேலும், இந்திய மற்றும் இலங்கை பணியாளர்களான இந்த 21 பேரும் விசாரணை செய்யப்பட்ட நிலையில், அவர்களின் தொலைபேசிகளும் அமெரிக்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அமெரிக்க பால்டிமோரில் தொழில்நுட்ப பிரச்சினையால் சரக்குக் கப்பல் கடல் பாலத்தில் மோதிய சம்பவம் இடம்பெற்று 50 நாட்களாகின்றது.

குறித்த சம்பவத்தில் உயிரிழந்த 6 கட்டுமானத் தொழிலாளர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த பேரழிவுக்கு கப்பல் பணியாளர்கள் தனிப்பட்ட ரீதியில் பொறுப்பேற்க வேண்டும் என்று சிலர் வலியுறுத்தி வருகின்றமை தொடர்பில் பணியாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதன் காரணமாக இவர்களில் சிலரின் மனவுறுதி புரிந்துகொள்ளக்கூடிய வகையில் குறைந்துள்ளதாக கடற்படையினரை பிரதிநிதித்து வப்படுத்தும் இரண்டு தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரி-6)

# வெப்ப அலைகளா...

# 1.53 லட்சம் பே...

## ஆய்வில் அதிர்ச்சித் த...

(கன்பெரா)

**உலகம் முழுவதும் வெப்ப அலையால் ஆண்டு... லட்சம் பேர் உயிரிழப்பதாக அதிர்ச்சித் தகவல் ... கியுள்ளது.**



அவுஸ்திரேலியாவில் உள்ள மோனாஷ் பல்கலைக்கழகம், உலக அளவில் ஏற்படும் வெப்ப அலைகள் குறித்தும், அது ஏற்படுத்தும் தாக்கம் குறித்தும் ஆய்வு செய்தது. அதன் அறிக்கை தற்போது வெளியாகியுள்ளது.

இந்த அறிக்கையின்படி, உலக அளவில் வெப்ப அலைகளால் ஒவ்வொரு ஆண்டும் 1.53 லட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழக்கின்றனர் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இதில் இந்தியா மிகப்பெரிய

## உக்ரைனுடனான பேச்சுவார்த்தைக்குத் தயார் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் பகிரங்கம்

(மொஸ்கோ)
ரஷ்ய உக்ரைன் போர் தொடர்பில், பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.



சீன ஜனாதிபதி ஜின்பிங் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு அழைப்பு விடுத்ததை தொடர்ந்து புடின் நேற்று சீனாவிற்கு பயணம் மேற்கொண்டுள்ளார். 5 ஆவது முறையாக பதவி ஏற்ற பிறகு ஜனாதிபதி புடின் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டு பயணம் இதுவாகும்.

2 நாட்கள் தங்கும் அவர் ஜனாதிபதி ஜின்பிங் மற்றும் உயர் அதிகாரிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

சீனா செல்லும் முன் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த புடின், உக்ரைன் போர் தொடர்பில் தான் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

நாங்கள் எப்போதுமே பேச்சுவார்த்தைக்கு மறுப்பு தெரிவித்ததில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

உக்ரைன் தொடர்பில பேச்சுவார்த்தையை தொடங்க விரும்புகிறோம், என்றாலும், அந்த பேச்சுவார்த்தைகள், ரஷ்யா உட்பட, பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ள எல்லா நாடுகளின் நலனையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (ரி-6)

## ஸ்லோவாக்கியா... பிரதமரின் உட...

(பிராகு)
மத்திய ஐரோப்பிய நாடான ஸ்லோவாக்கியா பிரதமர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ள நிலையில், படுகாய மடைந்த அவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

ஸ்லோவாக்கியா நாட்டின் பிரதமரான 59 வயதான ராபர்ட் ஃபிக்கோ மீது நேற்று துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

அந்நாட்டின் தலைநகர் ப்ராகுக்கு 150 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஹாண்ட்லோவா நகரில் தனது ஆதரவாளர்களிடையே பிரதமர் ராபர்ட் ஃபிக்கோ உரையாற்றிக் கொண்டிருந்த போதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அப்போது அவரை நோக்கி ஒருவர் 4 முறை துப்பாக்கியால் சுட்டுள்ளார் என்றும் இதில் ஃபிக்கோவின் வயிற்றுப் பகுதியில் குண்டுகள்





பாய்ந்ததாகவும் அந் நாட்டுச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இதனையடுத்து படுகாயமடைந்த அந்நாட்டு பிரதமர் உடனடியாக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட


நிலையில்... பெற்று ... நிலைமை... பதாகவு... காக பான... உள்ள... தொடர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ளால் ஆண்டுக்கு ...பேர் உயிரிழப்பு!

## ... தகவல்

### ...ஆண்டுக்கு 1.53 ...கவல் வெளியா...




பங்கைக் கொண்டுள்ளது. இந்தியாவில் வெப்ப சலனம் காரணமாக ஆண்டுக்கு சுமார் 30,000 பேர் உயிரிழப்பது அவுஸ்திரேலியாவின் மோனாஷ் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்த புள்ளி விவரங்கள் கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் 30 ஆண்டுகள் வரை எடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் 1.53 லட்சம் இறப்புகளில், இந்தியாவில் அது 20 சதவீதமாக உள்ளது. வெப்ப சலன இறப்புகளில் இந்தியாவிற்கு அடுத்தபடியாக சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் உள்ளன. சீனாவில் உயிரிழப்பு 14 சதவீதம், ரஷ்யாவில் 8 சதவீதமாக உள்ளன.

இந்த ஆய்வின்படி ஒவ்வொரு ஆண்டும் கோடையில் 1.53 லட்சம் பேர் இறக்கின்றனர். அவர்களில் 50 சதவீதம் பேர் ஆசியாவில் இறப்பதாக மோனாஷ் பல்கலைக்கழக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு மில்லியன் மக்களில் 236 பேர் வெப்ப அலையால் இறக்கின்றனர். அவுஸ்திரேலியா ஆராய்ச்சியாளர்கள் இங்கிலாந்தை தளமாகக் கொண்ட மல்டி-கன்ட்ரி மல்டி-சிட்டி (எம்.சி.சி) ஆராய்ச்சி நெட்வேர்க்கிலிருந்து தரவைப் பயன்படுத்தி இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளனர். இதில் 43 நாடுகளில் 750 இடங்களில் தினசரி இறப்புகள் பற்றிய ஆய்வும் அடங்கியுள்ளது. (நி-6)

## மசூதி மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

# 6 பேர் உயிரிழப்பு 18 பேர் காயம்




(அப்பூஜா)

மசூதிக்குள் தொழுகையில் இருந்தவர்கள் மீது இடம்பெற்ற பெற்றோல் குண்டுத் தாக்குதலில் அறுவர் உயிரிழந்துள்ளதுடன் 18 பேர் காயமடைந்துள்ளனர்.

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் மசூதிக்குள் குறித்த தாக்குதல் நடத்தப்பட்டது.


நைஜீரியாவில் கானோ மாகாணம், கடான் கிராமத்திலுள்ள மசூதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில், 4 சிறுவர்கள் உட்பட 24 பேர் காயமடைந்திருந்த நிலையில், அவர்கள் 6 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும், தாக்குதலை நடத்திய 38 வயதான நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை , இது ஒரு பயங்கரவாதத் தாக்குதல் அல்ல எனவும் மதப்பிரிவு அடிப்படையிலான நீண்ட கால குடும்பத்தகராறே தாக்குதலுக்குக் காரணம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.(நி-6-)

# ...கியாவில் துப்பாக்கிப் பிரயோகம் ... உடல்நிலை கவலைக்கிடம்



நிலையில், தொடர்ச்சியாக சிகிச்சை பெற்று வருவதாகவும் அவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் மேலதிக சிகிச்சைக்காக பானஸ்க் பிஸ்ட்ரிகா பகுதியில் உள்ள வைத்திசாலைக்கு ஹெலிகொப்டர் மூலம் அவர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என்றும் அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. துப்பாக்கிச் சூடு நடத்திய நபரை பொலிஸார் கைது செய்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமர் மீது தாக்குதல் நடத்துவது ஜனநாயகத்தின் மீது நடத்தப்படும் தாக்குதல் என்றும் நாட்டில் பரப்பப்படும் வெறுப்புணர்வே இது போன்ற தாக்குதலுக்குக் காரணம் என்றும் அந்நாட்டு ஜனாதிபதி ஜுவானா கேபுடோவா தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஆதரவாளரான ஸ்லோவாக்கியா நாட்டின் பிரதமரான ராபர்ட் ஃபிக்கோ மீது நடத்தப்பட்ட இந்தத்தாக்குதலுக்கான நோக்கம் குறித்து இதுவரை தெரிய வரவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

நேட்டோ அமைப்பின் உறுப்பு நாடான ஸ்லோவாக்கியாவின் பிரதமரை படுகொலை செய்ய முயற்சி நடைபெற்றுள்ள விவகாரமானது ஐரோப்பா முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 27 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய யூனியனின் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு 3 வாரங்களுக்கு முன்னர் இந்தப்படுகொலை முயற்சி நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# டுபாயில் பறக்கும் டாக்ஸி




(டுபாய்)

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள டுபாயில் பறக்கும் டாக்ஸி சேவையை அடுத்த ஆண்டு முதல் இயக்க திட்டமிடப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. உலக போக்குவரத்துத் துறையில் புதிய புரட்சியை ஏற்படுத்தும் வகையில் இந்த டாக்ஸி சேவை செயற்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நபருக்கு 350 எமிரேட்ஸ் திர்ஹாம்களுக்கு (சுமார் 30,000 இலங்கை நாணயம்) நாட்டின் பல்வேறு இடங்களுக்கு பயணிக்கக்கூடிய பறக்கும் டாக்ஸி சேவையானது சாதாரண பயணத்தில் கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலம் எடுக்கும் தூரத்தை 10 நிமிடங்களில் பூர்த்தி செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த விமான நிறுவனம் ஒன்றின் திட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ள இந்த டாக்ஸி சேவை, நகரின் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வாக அமையும் என்றும், போக்குவரத்து நெரிசலை குறைக்கும் என்றும் டுபாய் நிர்வாகம் நம்பிக்கை தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

நகரம் சுமார் 70% குறுகிய பயணங்களுக்கு 100 முதல் 500 மீற்றர் உயரத்திலும், நீண்ட பயணங்களுக்கு 1000 மீற்றர் உயரத்திலும் பறக்கும் டாக்ஸி சேவை திட்டமிடப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை உணவின்றி

# 6 லட்சம் மாணவர்கள் பாடசாலைக்கு வருகை

## பாட்டலி சம்பிக்க குழு வெளிப்படுத்தல்

(கொழும்பு)

**600,000 பாடசாலை மாணவர்கள் காலை சிற்றுண்டி இன்றி பாடசாலைக்கு வருவதாக பாட்டலி சம்பிக்கரணவக்க தலைமையிலான பாராளுமன்ற வழிகள் மற்றும் வழிமுறைகள் குழு வெளிப்படுத்தியுள்ளது.**



பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் பாடசாலைக்கு சிறுவர்களின் வருகை அதிகரித்துள்ளதாகவும் குழுவில் தகவல் வெளியாகியுள்ளன.

மேலும், ஆரம்ப தரத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை வழங்குமாறு கல்வி அமைச்சுக்கு குழு அறிவித்துள்ளது.

அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுக்காக வருடாந்தம் 1600 கோடி ரூபாவிற்கும் அதிகமான பணம் செலவிடப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உதவி வழங்க விரும்பும் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு முறையான முறைமை ஒன்றைத் தயாரிப்பதற்கும் குழு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 140 | 180 | 120-160 | 160 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 100 | 60 | 100 | 60-80 | 120 |
| தக்காளி | 180 | 180 | 120 | 130 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 140 | 180 | 100-130 | 160 |
| கோவா | 200 | 200 | 200 | 160 | 200 |
| கரட் | 300 | 240 | 200 | 180 | 250 |
| பூசணி | 100 | 80 | 80 | 80 | 100 |
| புடோல் | 200 | 160 | 140 | 120 | 200 |
| வாழைக்காய் | 100 | 80 | 60 | 80-100 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 300 | 200-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 260 | 230 | 200 | 250 |
| பாகற்காய் | 300 | 350 | 400 | 350 | 400 |
| வெண்டக்காய் | 100 | 200 | 150 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 600 | 500 | 400 | 500-700 | 450 |
| லீக்ஸ் | 250 | 300 | 250 | 200 | 350 |
| பீற்றூட் | 200 | 250 | 380 | 300 | 320 |
| கறிமிளகாய் | 200 | 150 | 200 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 600 | 400-600 | 800. |
| போஞ்சி | 600 | 500 | 400 | 250 | 450 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 160 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 120 | 500 | 100 | 60-80 | 80 |
| தேசிக்காய் | 1200 | 1300 | 1200 | 1200-1400 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 80 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 400 | 200 | 400 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 400 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 80 | 150 | 80 | 280 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 35 | 80 | 70 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 100 | -- | -- |

# இன்று ஒரு தகவல்

126



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மனைவியின் மனம்

ரோமபுரியிலே 2500 வருடத்திற்கு முன் யாராவது திருமணம் செய்யாமல் இருந்தால் அது மிகவும் ஆபத்தானது. ஆமாம்! அப்படியும் ஒரு நேரம் இருந்தது. ஏன் தெரியுமா? திருமணம் செய்யாத பிரம்மச்சாரிகளுக்கு அப்போது கடுமையான அபராதம் விதிப்பார்களாம். அதனாலே அபராதமா? கல்யாணமா? இது இரண்டிலே எது சிறந்தது என்று முடிவு செய்து அதற்குப் பின் அதற்குத் தகுந்த மாதிரி நடந்தார்கள். இந்தக் காலத்தில் அது இரண்டிலே எது சிறந்தது என்று முடிவு செய்வது மிகவும் கடினம். சில நேரங்களில் இது பரவாயில்லை என்று தோன்றும். சில நேரங்களில் அது பரவாயில்லை என்று தோன்றும்.

அது இருக்கட்டும். ஒரு நல்ல கணவன் எப்படி இருக்க வேண்டும் என்று பெண்கள் எதிர்பார்க்கிறார்கள்? இந்த ஆராய்ச்சியில் சிலர் ஈடுபட்டார்கள். இத்தாலி, அமெரிக்கா, கனடா இந்த நாடுகளிலே தனித் தனியாக அந்த நாட்டுப் பெண்களிடம் அபிப்பிராயம் கேட்டு அவற்றை எல்லாம் தொகுத்து வெளியிட்டார்கள். முதலிலே மென்மை. இதைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்? வெளியிலே உறுதியும் வீரமும் உள்ளவராக இருக்க வேண்டும். தன் மனைவியிடம் இனிமை கலந்த மென்மை உள்ளவராக இருக்க வேண்டும். இது தான் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் பல பேர் வீரத்தை வீட்டு வாசற்படி தாண்டி வெளியே கொண்டுவருவது இல்லை. என்ன செய்வது?

எப்போதாவது ஒரு சில தடவை கணவன் மனைவியைப் பார்த்து நான் உன்னை மிகவும் விரும்புகின்றேன் என்று சொல்ல வேண்டும் என்று எதிர்பார்கிறார்களாம். சொல்லது தானே சும்மா சொல்லுங்கள்! என்ன குறைந்து போய்விடும்? அடுத்தது மரியாதை. கணவன் முரட்டுத்தனமாகவோ அலட்சியமாகவோ மரியாதைக் குறைவாகவோ நடந்து கொள்வதை எந்த மனைவியும் விரும்புவதில்லை. கணவன்மார்கள் முணுமுணுப்பது காதிலே விழுகிறது. இப்பவே சொல்லிவிடுகிறேன். இது மனைவிக்கும் பொருந்தும். போதுமா?

அடுத்தது கருத்து அறிதல். மனைவியின் தேவைகளை தெரிந்து கொண்டு அவர்களுடைய பிறந்தநாள் அன்று தேவைப்படுவதை பரிசாக கொடுத்துப் பாருங்கள். அதனுடைய மதிப்பே தனி! அவர்கள் பெருந்தன்மையை புரிந்து கொண்டு அதற்கு தகுந்த மாதிரி அன்பு காட்டுவது முக்கியம். அடுத்த கருத்து நீதி. கணவன் தான் வீட்டுத் தலைவன் என்ற நினைப்பிலே மனைவிக்கு சொந்தவச் செலவிற்கும் வீட்டு செலவிற்கும் கொடுக்கின்ற பணத்திலே சிக்கனம் காட்டக் கூடாது. ஏன் என்றால் பல மனைவிகளுடைய மனக்குறை என்ன தெரியுமா? அவர் மட்டும் தன்னுடைய செலவிற்கு அதிகமாக பணம் வைத்திருக்கிறார் என்பது தான்.

அடுத்தது நன்றியுடைமை. பல மனைவிமார்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? நானும் என்னுடைய வீட்டுக்காரரும் மற்றவர்களுடன் சேர்ந்து வெளியில் செல்லும் போது அவர் என்னை கேலி செய்கிறார். பரிகாசம் செய்கிறார். அவமானப்படுத்துகிறார். எங்கள் குழந்தைகள் முன்னால் கூட எம் மேல் குற்றம் கண்டுபிடிக்கிறார்கள். இப்படி கூறி பலர் மனவேதனைப்படுகிறார்கள். தன்னுடைய கணவர் என்றைக்கும் தன்னைக் காட்டிக் கொடுக்க மாட்டார் என்ற நம்பிக்கையை மனைவிக்கு உண்டாக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் இல்லற வாழ்க்கை இன்பமாக இருக்கும்.

அடுத்த கருத்து நேர்மை. மனைவிக்கு தெரியாத இரகசியம் சந்தேகத்தை உண்டாக்கும். கணவன் தன்னிடம் பொய் சொல்லுகின்றான் என்று ஐயப்பாடு வந்த உடனே அவருடைய நடத்தை எல்லாமே சந்தேகத்திற்குரியதாகிவிடும். அதனால் உண்மையாகவும், நேர்மையாகவும் கணவன் நடந்து கொள்ள வேண்டியது அவசியம். ஆக இப்படி ஏழு விதமான ஆலோசனைகள் இந்த ஆராய்ச்சியின் மூலமாக எமக்கு கிடைத்திருக்கின்றன. சாதாரண ஆராய்ச்சி இல்லை. சர்வதேச அளவிலே நடந்த ஆராய்ச்சி.

ஒருவரை ஒருவர் எப்படி செல்லமாக அழைப்பது தெரியுமா? இது ஊருக்கு ஊர் வேறுபடுகிறது. லிதுவேனியாவிலே காட்டு மலரே என்பார்களாம். திபேத்திலே சின்னஞ்சிறு பன்றியே என்பார்களாம். வியன்னாவிலே சிறு நத்தையே என்பார்களாம். செர்பியாவிலே வெட்டுக் கிளியே என்பார்களாம். யுகோஸ்லாவிலே சின்னஞ்சிறு புல்லே என்பார்களாம். இது எல்லாம் ஒரு தகவலுக்காக சொல்லுகிறேன். இதை சீரியஸாக எடுத்துக் கொண்டு என்னிடம் சண்டைக்கு வராதீர்கள். இன்றைய தகவலுடைய நீதி என்னவென்றால் குடும்பம் குதூகலமாக இருக்கவேண்டும் என்றால் ஒருவரை ஒருவர் நன்றாக புரிந்து கொண்டு நடக்கவேண்டும். சண்டை சச்சரவு இருக்கக்கூடாது என்பது தான். எங்கள் வீட்டிலே முன்பெல்லாம் தினமும் சண்டை போட்டுக் கொண்டிருப்போம். இப்போது ஒரு மாதமாக சண்டை சச்சரவே இல்லை என்று பெருமையாக சொன்னார் ஒருவர். எப்படி அது என்று கேட்டேன். சம்சாரம் பிறந்த வீட்டிற்குப் போயிருக்கின்றார். அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி ஆவணம் வழங்குவதற்கு தற்போதைய பெறுமதியில் பணம் அறிவிடுவது முறை அல்ல

## சமத்துவக்கட்சி ஜனாதிபதிக்கு கடிதம்

(தருமபுரம்)

காணி ஆவணம் வழங்குவதற்கு 40 வருடங்களாக குடியிருப்பவர்களிடம் தற்போதைய பெறுமதியில் கட்டணம் அறவிடுவது முறையல்ல என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளவதாவது,

அரசினால் காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணிகளில் நீண்ட காலமாகக் குடியிருந்து வருவோருக்கான காணி அனுமதிப் பத்திரம், அளிப்புப் பத்திரம் போன்ற ஆவணங்களுக்கு 2024 இற்கான பாதீட்டு முன்மொழிவிற்கு அமைய முழு உரித்துள்ள உரிமைப்பத்திரங்கள் வழங்கப்படுகிறது.

காணி உரித்துப் பத்திரங்கள் மக்களுக்குக் கிடைக்கும் போதும் வடக்குக், கிழக்கு மாகாணங்களில் ஒரு தொகுதியினருக்கு இந்த உரித்துப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதில் இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளது. வடக்குக், கிழக்கில் ஏற்பட்ட போர்ச் சூழ்நிலை காரணமாக அரச காணிகளில் குடியிருந்தும் ஆவணம் பெற்றுக் கொள்ள முடியாமற்போனவர்கள், ஏற்கனவே ஆவணத்தைப் பெற்றிருந்தும் இடப்பெயர்வுகளினால் ஆவணத்தைத் தவறவிட்டோர், இதனாற் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் காணிகளில் குடியிருப்போர் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சித் தகுதியைப் பெற்று, அவற்றைப் போர்ச் சூழலுக்கு மத்தியிலும் அபிவிருத்தி செய்துள்ளனர்.

2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் (மீள்குடியேற்றத்தின் பின்னர்) மேற்படி காணிகளுக்கான அனுமதிப் பத்திரத்தைக் கோரியபோது,

இவர்களுடைய காணிகளுக்குத் தற்போதைய தகுதி மட்டம் (வருமானம்) கவனத்திற் கொள்ளப்பட்டு, தற்போதைய கொள்வனவு மதிப்பீட்டுப் பெறுமதியைச் செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. இது தவறான ஒரு நடைமுறையாகக் காணப்படுகிறது. ஏனெனில், இந்தக் காணிகளில் 40 ஆண்டுகளுக்கு முன்பு இந்த மக்கள் குடியேறிய போது அவை காடுகளாகவே இருந்தன.

அவற்றை வெட்டித் துப்புரவு செய்தே அபிவிருத்திப் படுத்தினர். அன்றைய பெறுமதி மட்டம் வேறாக இருந்த காணியானது இன்று அவர்களுடைய கடுமையான உழைப்பினால் கூடிய பெறுமதியைக் கொண்டுள்ளது. இந்த நிலையில் இந்தக் காணிகளுக்கு இன்றைய பெறுமதியைச் செலுத்துமாறு கேட்பது, தங்களுடைய நீண்ட கால உழைப்புக்கு அவர்கள் விலையைக் கொடுத்து வாங்க வேண்டிய ஒரு அவல நடவடிக்கையாகவே அமையும். எனவேதான் இதைத் தவறான நடவடிக்கையாகக் குறிப்பிடுகிறோம்.

ஏற்கனவே இந்தப் பிரதேசங்களில் வாழும்போது போரினால் ஏற்பட்ட இழப்புகள், சேதங்களுக்கான இழப்பீடுகள் கூட இன்னும் முழுமையாக வழங்கப்படாத சூழலில் காணிக்கான இன்றைய பெறுமதியைச் செலுத்துமாறு கோருவது குறித்த மக்களுக்கு நெருக்கடியையே உண்டாக்குகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6-316)

# உயிர்நீத்த உறவுகளுக்கு மன்னாரில் நினைவேந்தல்



(மன்னார்)

மன்னார்-நானாட்டான் பேருந்து நிலைய பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மற்றும் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகம் இடம்பெற்றது.

கடும் மழைக்கு மத்தியிலும் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர் நீத்தவர்களை நினைவு கூறினர்.

அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது. குறித்த நினைவேந்தல் நிகழ்வில் மதத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மக்கள், தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் உள்ளடங்களாக பலர் கலந்து கொண்டிருந்தனர். (நி-6-285)

# மணல் ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் 21.05.2024 ஆம் திகதியன்று காலை 8.30 மணிக்கு எமது நீதிமன்ற வளாகத்தில் மணல் ஏல விற்பனை நடைபெறவுள்ளது என கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-6)

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தினால் அரசுடமையாக்கப்பட்ட மணல் பகிரங்க ஏல விற்பனை எதிர்வரும் 29.05.2024 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-6)

# குடிமனைக்குள் நுழைந்த 5 அடி நீள முதலை மீட்பு

(வவுனியா)



வவுனியா, கூமாங்குளம் கிராமத்தில் உள்ள வீடொன்றின் வளாகத்திற்குள் நுழைந்த 5 அடி நீள முதலை, பாதுகாப்பாக மீட்கப்பட்டு, காட்டில் விடப்பட்டது.

வீட்டு வளாகத்தில் நுழைந்த முதலையை அவதானித்த வீட்டின் உரிமையாளர் வனஜீவராசி திணைக்களத்தினருக்கு தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த இடத்திற்கு விரைந்த வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், கிராமத்தவர்களின் ஒத்துழைப்புடன் முதலையினை பிடித்து காட்டில் பாதுகாப்பாக விட்டனர். (நி-6)

# மல்லாவி நீர் சுத்திகரிப்பு நிலைய நிர்மாணத்திற்கு அடிக்கல் நாட்டல்



(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை மற்றும் துணுக்காய் பகுதி மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்கும் நோக்குடன், மல்லாவி நகர நீர் வழங்கல் திட்டத்திற்கான, நீர் சுத்திகரிப்பு நிலைய நிர்மாணத்திற்கு நேற்று முன்தினம் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரால் நீர் சுத்திகரிப்பு நிலைய நிர்மாணத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

நிலத்தடி நீரினால் மாந்தை மற்றும் துணுக்காய் பகுதிகளில் மூன்று வீதமான மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிறுநீரக பாதிப்புக்கு தீர்வை பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினூடாக மல்லாவி நகர நீர் வழங்கல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் வவுனிக்குளம் நீர்தேக்கத்திலிருந்து நீரை பெறுகின்ற கரும்புள்ளியான் குளத்திலிருந்து, புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள மேற்பரப்பு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீர் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

உலக வங்கியின் 1856 மில்லியன் ரூபா நிதி அனுசரணையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மல்லாவி நகர நீர் வழங்கல் திட்டத்திற்கான நிர்மாணப் பணிகளை எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் ஊடாக மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 35 கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் 6968 குடும்பங்களை சேர்ந்தவர்கள் நன்மையடையவுள்ளனர். (நி-6)

# பல்கலைக்கழக மாணவர்களால் கிளிநொச்சியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

(முறிகண்டி)



முள்ளிவாய்க்கால் வாரத்தினை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து முள்ளிவாய்க்கால் வாரத்தினை நினைவுகூரும் முகமாக கிளிநொச்சி அறிவியல்நகர் பல்கலைக்கழகசந்தியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

அதேவேளை கிளிநொச்சி உழவனூர் பகுதி இளைஞர்களின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்ட மக்களுக்காக அஞ்சலி செலுத்தப்பட்டு பின்னர் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி வழங்கப்பட்டது.

இறுதி யுத்தத்தில் உணவுத் தேவையுடன் வாழ்ந்த மக்களுக்கு முள்ளிவாய்க்கால் பகுதியில் கஞ்சி வழங்கப்பட்டு உயிர் காக்கப்பட்டது.

இதனை நினைவு கூரும் வகையில் வடக்கு,கிழக்கில் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-100-316)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 483





ஆனால் அவன் ஒருவனால் அது எப்படி முடியும்? பத்துப் பேர் சேர்ந்து செய்ய வேண்டிய காரியம் அல்லவா? பத்துப் பேர் இல்லாவிட்டாலும் நாலு பேராவது வேண்டும். ஒருவன் தனியாக என்ன செய்வது? கடவுள் விட்டவழி விடுகிறார். கப்பல் அடைந்த கதியை அடைகிறது என்று சும்மா இருக்க வேண்டியதுதான்!

கப்பல் அடையப்போகிற கதி என்னவென்று அவனுக்குச் சீக்கிரத்திலேயே தெரிந்து போயிற்று. அப்படியும் இப்படியும் சிறிது நேரம் அலைந்து கொண்டு இருந்தது. பிறகு கடலில் முழுகிப் போக வேண்டியதுதான்! முழுகுவதற்கு முன்னால் சுக்குச் சுக்காக உடைந்து போனாலும் போகும்! கப்பலின் கதி எப்படியானாலும், தன்னுடைய கதியைப் பற்றிச் சந்தேகமில்லை!

நடுக்கடலில் மரணம்! அந்தக் கும்பகோணத்துச் சோதிடன் இதைப்பற்றி ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. பார்! சோதிடனாம் சோதிடன்! அவனை மறுபடி பார்க்க நேர்ந்தால் பைத்தியக்காரத்தனம்! அவனை மறுபடி பார்ப்பது ஏது?

திடீரென்று வந்தியத்தேவன் தோளில் கெட்டியான பொருள் ஏதோ விழுந்தது. சடபடவென்று கப்பல் முழுவதும் சிறிய சிறிய கூழாங்கற்கள் விழுந்தன. அந்தக் கூழாங்கற்கள் எப்படிப் பளிங்குபோல் பிரகாசிக்கின்றன! வானத்திலிருந்து இவை எப்படி விழுகின்றன!

இன்னும் இரண்டு மூன்று கற்கள் அவன் தலையிலும் முதுகிலும் தோள்களிலும் விழுந்தன. அவை விழுந்த இடத்தில் முதலில் வலி பிறகு ஒரு குளிர்ச்சி. கப்பலில் விழுந்த கற்களைப் பார்த்தால், ஆ! அவை உருகிக் கரைந்து போய் கொண்டிருக்கின்றனவே? ஆ! அவை உருகிக் கரைந்து போய் கொண்டிருக்கின்றனவே? ஆம் இது பனிக்கட்டி மழை. அதுவரை வந்தியத்தேவன் அத்தகைய மழையைப் பார்த்ததுமில்லை அனுபவித்ததுமில்லை. மடிவதற்கு முன்னால் இந்த அற்புதத்தைப் பார்க்க முடிந்ததே என்ற குதூகலம் அவன் உள்ளத்தில் தோன்றியது.

கப்பல் தளத்தில் உட்கார்ந்து, கரைந்து கொண்டிருந்த பனிக்கட்டிக் கற்களைத் தொட்டுப் பார்த்து மகிழ்ந்தான். அப்பா என்ன சிலிர்ப்பு! தொடும்போது தீயைத் தொடுவதுபோல் அல்லவா இருக்கிறது? ஆனால் தீ தோலைச் சுட்டுத் தீய்ப்பது போல் அது செய்யவில்லை. விரைவில் சூடு குளிர்ச்சியாகி விடுகிறது. கல் மழை எதிர்பாராமல் வந்தது போலவே சட்டென்று நின்றது. பெய்த நேரம் அரைக்கால் நாழிகை கூட இராது.

பிறகு சாதாரண மழை பெய்யத் தொடங்கியது. மழை ஜலம் கப்பலில் விழுந்து சிதறி ஓடிக் கடலில் விழுந்துவிடுவதை வந்தியத்தேவன் கவனித்தான். சோழ நாட்டு மரக்கலத் தச்சர்களின் கெட்டிக்காரத்தனத்தை வியந்தான். எத்தனை மழை பெய்தாலும் எத்தனை பெரிய அலைகள் மோதிக் கடல் ஜலம் கப்பலில் வந்தாலும், மீண்டும் கடலிலேயே தண்ணீர் போய் விழும்படியாக அக்கப்பல் அமைக்கப்பட்டிருந்தது. கப்பலின் கீழ்ப்பகுதி உடைந்து கடல்நீர் உள்ளே புகுந்தாலன்றி அதை மூழ்கடிக்க முடியாது!

இதைப் பார்த்ததும் அவனுக்குச் சிறிது தைரியம் உண்டாயிற்று. உடனே ஒரு நினைவு வந்தது. தன்னைக் கட்டிப் போட்டிருந்த அறைக்கதவு திறந்திருந்தால் அதன் வழியாகத் தண்ணீர் உள்ளே புகுந்துவிடலாம். ஓடிப் போய்ப் பார்த்தான். அவன் நினைத்தபடி கதவு திறந்து காற்றில் அடித்துக் கொண்டிருந்தது. கதவை இறுக்கிச் சாத்தித் தாளிட்டான்.

மேலே காற்றும் மழையும் பொறுக்க முடியாமற் போனால் அந்த அறைக்குள்ளே புகுந்துகூடத் தான் கதவைத் தாளிட்டுக் கொள்ளலாம். பிறகு கடவுள் விட்ட வழி விடுகிறார் என்று நிம்மதியாக இருக்கலாம்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்



(நேற்றைய தொடர்ச்சி...)

## வீராதி வீரன்!



"அரசே! இப்படிப் பட்ட பெரிய சோதனையைத்தான் எதிர்பார்த்தேன். என் வீரத்தைக் காட்ட நல்ல வாய்ப்பு. அந்தப் பூதத்தைக் கொன்று அதன் தலையை எடுத்து வருகிறேன். எனக்கு என்ன பரிசு தருவீர்கள்?"

"எந்த வீரனாலும் செய்ய முடியாத செயல் இது. நீ அந்த பூதத்தைக் கொன்றால் இளவரசியை உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன்," என்றார் அரசன்.

"பூதத்தின் தலையுடன் வருகிறேன்," என்று காட்டிற்குப் புறப்பட்டான்.

"அந்த பூதத்தை வாளால் வெட்டி வீழ்த்த முடியாது. அதைக் கொல்ல என்ன செய்வது?" என்ற சிந்தித்தபடியே காட்டுக்குள் நடந்தான் பால்பாண்டி.

தன் கையிலிருந்த வெண்ணெயை உருட்டினான் அவன். அது பந்து போல ஆனது. பார்ப்பதற்கு வெண்நிற கூழாங்கல்லைப் போலக் காட்சி தந்தது. அதைச் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டான்.

அவன் அருகே குருவி ஒன்று பறந்து சென்றது. அதைப் பிடித்த அவன் அதையும் தன் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டான்.

அங்கிருந்த உயரமான மரம் ஒன்றைப் பார்த்தான். அதில் ஏறி அமர்ந்து கொண்டான். இந்த வழியாகப் பூதம் வரும் என்று காத்திருந்தான்.

சிறிது நேரம் சென்றது. மலை அசைந்து வருவது போலப் பெரிய பூதம் ஒன்று அங்கு வந்தது. அதன் தோற்றமே பயங்கரமாக இருந்தது. பூதத்தைப் பார்த்த அவன் நடுங்கினான்.

மூக்கை உறிஞ்சிய அது, "ஆ! மனித வாடை அடிக்கிறது. எனக்கு நல்ல விருந்து கிடைத்தது. நீ எங்கே இருக்கிறாய்?" என்று மகிழ்ச்சியுடன் கத்தியது.

"அந்தப் பூதம் என்னைக் கண்டுபிடித்துவிடும். ஏமாற்றித்தான் அதனிடமிருந்து தப்ப வேண்டும்" என்று தன் நடுக்கத்தை மறைத்துக் கொண்டான்.

உரத்த குரலில் அவன், "ஏ! பூதமே! என்னையா தேடுகிறாய்? நான் யார் என்பது தெரியாமல் பிதற்றுகிறாயா? மாவீரனான நான் ஒரே நாளில் இருநூறு பேரைக் கொன்றேன். முந்நூறு பேர் படுகாயம் அடைந்தனர். நான் கீழே இறங்கினால் நீ தொலைந்தாய்," என்று மிரட்டினான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மே 18 என்றால் அது தமிழ் இனத்தின் துக்கநாள்

நாளை மே – 18. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல். ஈழ மண்ணில் தமிழின அழிப்பு நடந்த மிக மோசமான நாள்.

யுத்தம் நடத்திய சிங்களப் பேரினவாதம் அப்பாவித் தமிழ் மக்களைக் காப்பாற்றும் நினைப்பு இம்மியும் இல்லாமல் போருக்குள் அகப்பட்ட அத்தனை தமிழ் மக்களையும் கொன்று குவிக்கும் நோக்குடன் யுத்தத்தை மேற்கொண்டது.

இதனால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

மூன்று இலட்சம் மக்கள் முட்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டனர். சரணடைந்தவர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். இவ்வாறு மிகப் பெரும் மனிதப் பேரவலம் நடந்த போதிலும் சர்வதேச நாடுகள் மௌனம் சாதித்தன.

சுருங்கக்கூறின் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை அரசாங்கம் கொன்று குவித்த போது, உலக நாடுகளும் ஐ.நா சபை உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களும் மௌனம் சாதித்தன எனும்போதுதான் உலக நாடுகள் அநீதியின் பக்கம் நிற்கவல்லவை என்ற உண்மை உணரப்பட்டது.

இதேபோன்று சர்வதேச அமைப்புகள் வல்லாதிக்க நாடுகளின் ஒருவகைப் பிரதிநிதித்துவமேயன்றி, அவை அடக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பதற்கான அமைப்புகள் அல்ல என்பதும் தெரியவந்தது.

ஆம், 2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டபோது, ஐ.நா சபையின் அன்றைய செயலாளர் பான் கீ மூன் மௌனம் சாதித்தார்.

தவிர, இலங்கை அரசாங்கத்தின் உலங்குவானூர்தியில் வன்னியைச் சுற்றிப் பார்த்துவிட்டு பேசாது சென்றார்.

என்ன செய்வது ஐ.நா சபை மீதான நம்பிக்கைகள் எத்துணை உயர்வாக இருந்தன. ஆனால் அவை அத்தனையும் தவிடுபொடியாகுமாறு ஈழத் தமிழ் மக்களின் விடயத்தில் ஐ.நா சபை நடந்து கொண்டது.

அன்று எம் இனத்துக்கு நடந்த அதே அநீதியும் அதே மௌனமும் இன்று காசாவிலும் தொடர்கிறது.

எதுஎவ்வாறாயினும் அக்கிரமங்கள் – அநீதிகள் – அதர்மங்கள் ஒருபோதும் நிலைக்கப் போவதில்லை.

அந்த உண்மையை; தமிழ் மக்கள் மீது யுத்தம் நடத்தியவர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். இனியும் அனுபவிப்பர்.

ஆம், உலக நாடுகள் அரசாங்கம் என்ற பேரில், பெரும்பான்மை இனம் என்ற வகையில் சிறுபான்மை மக்கள்படுகின்ற துன்பத்தைக் கண்டு கொள்ளாமல் இருக்கலாம்.

ஆனால் இயற்கை நிச்சயம் தண்டனை வழங்கியே தீரும் என்பது சத்தியமான உண்மை.

இந்த இயற்கையின் நியதியை உள்ளூர உணர்ந்து கொள்வோம்.

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அது எம் தமிழ் இனத்தின் துக்கநாள்.

ஆம், மே 18 என்றால் அது தமிழ் உலகுக்கு துக்க நாள் என்பது நாளைய நினைவேந்தலில் பிரகடனமாகட்டும்.

ஒவ்வொரு வருடமும் கூடி துக்கநாள் எனத் தீர்மானிப்பதற்கு இது வெறும் வழக்குத் தவணை அன்று.

ஆகையால் மே 18 ஐ உலகத் தமிழ் இனம் துக்க நாளாக அனுஷ்டிக்கட்டும். இஃது முள்ளிவாய்க்காலில் சாசனமாக எழுதப்படட்டும்.

### ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர்

# தமிழர்களின் எதிர்காலத்தை ஆபத்தில் சிக்க வைக்கும் விஷப் பரீட்சையாகும்

### இரா. சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் யோசனை தமிழர்களின் எதிர்காலத்தை ஆபத்தில் சிக்கவைக்கும் விஷப்பரீட்சை என பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

"உள்ளக சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைந்த வடக்கு - கிழக்குக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வு என்பதுதான் சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசும் சேர்ந்து இணங்கிக் கொண்ட கடைசி விடயம்.

அதற்கு பாதிப்பு - குந்தகம் ஏற்படுத்தும் விதத்திலான முடிவு எதையும் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விஷப்பரீட்சை ஊடாக செய்வதற்குத் தமிழரசுக் கட்சியினர் இணங்கி விட - இறங்கி விடக் கூடாது." என தமது தமிழரசுக் கட்சியினருக்கு அக்கட்சியின் பெருந்தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று தம்மை தமது கொழும்பு இல்லத்தில் சந்தித்த கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மூலமே தமது நிலைப்பாட்டை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த சந்திப்பின்போது சம்பந்தன் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் திட்டத்தின் ஆபத்துக் குறித்து தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராஜாவுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசி விளக்கியுள்ளேன்.

இந்த வாரத்தில் சிறீதரன் எம்.பியும் என்னை வந்து சந்தித்தார். அவருக்கும் எல்லாவற்றையும் விளக்கியுள்ளேன்

தமிழர்களின் உரிமைக்கான போராட்டம் மிக நீண்டது. பல கட்டங்களைத் தாண்டி வந்துள்ளோம். ஒஸ்லோ அறிவிப்பு அதில் உச்சமானது. உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைந்த வடக்கு - கிழக்குக்கு சமஷ்டி முறையிலான தீர்வுக்கு அந்த அறிவிப்பு மூலம் இலங்கை அரசு இணங்கி வந்துள்ளது.

அதற்குக் குறைந்த எதற்கும் இணங்கும் ஏற்பாடுகளுக்கு நாம் போக முடியாது. அந்த நிலைப்பாட்டை சிதறடிக்கும் விதமான ஒரு விஷப் பரீட்சைக்குப் பொது வேட்பாளர் என்ற அடிப்படையில் தமிழினம் இணங்கவோ, இறங்கவோ கூடாது.

வடக்கு - கிழக்கில் இருந்து நாட்டுக்குள்ளும் வெளிநாடுகளுக்கும் பல இலட்சம் தமிழர்கள் இடம் பெயர்ந்துள்ள நிலையில் பொது வாக்கெடுப்பு போன்ற ஒன்றை - விஷப் பரீட்சையை நாமே கோரி அதில் இறங்குவது என்பது நம்மை நாமே அழிப்பதற்கு ஒப்பானதாகும். ஆகவே, அத்தகைய திட்டத்துக்குத் தமிழரசுக் கட்சி இடம் கொடுக்கக் கூடாது இதை என்னுடைய செய்தியாகத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் கூறுங்கள். இந்த விடயத்தை ஏற்கனவே மாவை சேனாதிராஜாவுக்கும் சிறீதரனுக்கும் நான் விளக்கியுள்ளேன். மாவையுடன் திரும்பவும் பேசுவேன்." - என்று சம்பந்தன் குறிப்பிட்டிருக்கின்றார்.

(ம-7,10)

### யுத்த காலத்தில்

# மரணித்தோர், காணாமல் போனோர் விடயத்தில் மனிதாபிமானம் தேவை

### கருஜயசூரிய கோரிக்கை

யுத்த காலத்தில் இறந்தவர்கள், காணாமல் போனவர்கள் விடயத்தில் ஒட்டுமொத்த சமூகமும் உணர்வுபூர்வமாக செயல்பட வேண்டியுள்ளது என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய கோரியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யுத்த காலகட்டத்தில் உயிரிழந்த மற்றும் காணாமல்போன இலங்கை பிரஜைகளை நினைவுகூர்ந்து மூதூரில் கஞ்சி வழங்குவதற்கு செய்திருந்த ஏற்பாடுகளுக்கு அரச அதிகாரிகள் எதிர் வினை ஆற்றியிருப்பது தொடர்பில் நாம் மிகுந்த வருத்தம் அடைகின்றோம்.

தமக்கு நெருக்கமானவர்களின் மரணம் மற்றும் காணாமல் போனவர்கள் பற்றி பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு இருக்கும் மன வேதனையை நாம் ஒரு சமூகம் என்ற வகையில் உணர்வுபூர்வமாக புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும், இந்த நாட்டை இருண்ட யுகத்துக்குள் கொண்டுசெல்லாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பது ஒட்டுமொத்த சமுதாயத்தினரதும் பொறுப்பாகும்.

அதற்கமைய அரச அதிகாரிகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த சமூகமும் இது போன்ற சூழ்நிலைகளின்போது நாட்டின் பொது நலனை முதன்மையாக கருதி செயல்பட வேண்டும். அப்படி இல்லாவிட்டால் எமது நாட்டை மீண்டும் இருளில் தள்ளுவதற்கு அதுவே காரணமாக அமையக்கூடும்.

மீண்டும் இதுபோன்ற சூழல்கள் ஏற்படுவதை தடுப்பதற்கும், அவர்கள் அனைவருக்குமான நீதியை நிலைநாட்டுவதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு அனைத்து தரப்புகளிடத்திலும் கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது (ம-7,10)

# நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹானுக்கு கொலை மிரட்டல்

### பொலிஸார் தீவிர விசாரணை

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவிற்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் கோட்டை பொலிஸ் நிலையம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சரின் அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் பிற்பகல் குறித்த தொலைபேசி அழைப்பு வந்துள்ளதுடன், எதிர் வரும் தேர்தலில் இராஜாங்க அமைச்சரை போட்டியிட அனுமதிக்கப் போவதில்லை எனவும், மீறினால் கொலை செய்து விடுவேன் எனவும் ஷெஹான் சேமசிங்கவை அச்சுறுத்திய நபர் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

# யாழ் மண்ணே வணக்கம் செயற்திட்ட அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வாழ்வும் வளமும் சார்ந்த நூற்றாண்டுப் புலமைகளின் தேடல்களை அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லும் பயணம் "என்னும் தொனிப்பொருளில்` யாழ்ப்பாணப்பெட்டகம் நிழலுருக் கலைக்கூடம்,மற்றும் காவேரிக் கலாமன்றம் இணைந்து உலக பண்பாட்டுத் தினத்தினை முன்னிட்டு நடத்தும் "யாழ்மண்ணே வணக்கம்"செயற்திட்ட அறிமுக விழா - 2024 வானது எதிர் வரும் செவாய்க் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல.37,சேர். பொன்.இராமநாதன் வீதி. யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபம் (ராஜா கிறீம் ஹவுஸ்) இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர், வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம-7,10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலி சுமந்த உறவுகளின் உயிர்காத்த உணவு முள்ளிவாய்க்காலில் வழங்கி வைப்பு



(நெளுக்குளம்)

முள்ளிவாய்க்கால் மனிதப் பேரவலத்தை- தமிழ் இனப் படுகொலையை நினைவூட்டும் வகையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு தொடர்ச்சியாக தமிழர் தாயகம் முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் தாயக நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் இறுதி உயிரை காப்பாற்ற வலி சுமந்த உறவுகளின் உயிர்காத்த உணவான முள்ளிவாய்க்கால் கஞ்சியானது முள்ளிவாய்க்கால் மேற்கு பொதுச் சந்தை கட்டடத்திற்கு முன்பாக நேற்றுக் காலை வழங்கப்பட்டது. (நி-6-299)

# கிளிநொச்சியில் இடம்பெற்ற மாகாணமட்ட கராத்தே போட்டி



(கிளிநொச்சி)

மாகாண விளையாட்டுத் திணைக்களத் தின் ஏற்பாட்டில் மாகாண மட்ட கராத்தே போட்டி கடந்த 11 ஆம் திகதி சனிக்கி கிழமை கிளிநொச்சி பொது உள்ளக விளையாட்டு அரங் கில் மிக சிறப்பாக நடைபெற்றது.

இப்போட்டியில் பங்கு கொண்ட சர்வதேச சக்குறா சோட்டோகான் கராத்தே சங்கத்தைச்சேர்ந்த கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லை மாவ ட்டங்களைச் சேர்ந்த வீர, வீரா ங்கனைகள் 12 தங்கம்,8 வெள்ளி, 15 வெண்கலம் அட ங்கலாக 35 பதக்கங்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர். (நி-6)

# உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பூநகரியில் தூய்மைப்படுத்தல்



(தருமபுரம்)

நாடளாவிய ரீதியாக உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பல்வேறு விழிப்புணர்வு செயற்றிட்டங்கள் பரவலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்தவையில் உலக சுற்றுச் சூழல் தினத்தினை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பள்ளிக்குடா கடற்கரையினை தூய்மைப்படுத்தும் செயற்றிட்டம் நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த தூய்மைப்படுத்தும் பணியை மத்திய சுற்றாடல் அதிகார சபை, பூநகரி பிரதேச செயலகம், பூநகரி பிரதேச சபை, பூநகரி பொலிஸ் நிலையம், கடல் சார் சுற்றுசூழல் பாதுகாப்புத் திணைக்களம், வான்வில் ஆடை தொழிற்சாலை, பள்ளிக்குடா கடற்றொழிலாளர் சமாசம், பாடசாலை சுற்றாடல் முன்னோடிக் கழகம், கிராம மட்ட அமைப்புக்கள் இணைந்து மேற்கொண்டனர்.

இதன்போது, பள்ளிக்குடா கடற்கரையில் வீசப்பட்டிருந்த பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்கள் உட்பட சூழலுக்கு தீங்குகளை ஏற்படுத்தும் குப்பைகள் சேகரிக்கப்பட்டு, பூநகரி பிரதேச சபையின் உதவியுடன் அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6-316)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3119

விநேஷ்





கல்யாணி




கருணி




நிதேஷ்




லோகேஷ்




லக்சனா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 இந்திய...

கரையொதுங்கியுள்ளனர்.

படகு பழுதா? அல்லது என்ன நோக்கத்திற்காக மூவரும் கரையொதுங்கினார்கள் என்பதை விசாரணை செய்வதற்காக மூவரையும் இளவாலைப் பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

விசாரணைக்கு பின்னர் மூவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7,10,33)

## இளம் குடும்பப்...

உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணின் கணவரும் மகளும் பிரான்ஸில் வசித்து வருகின்றனர். இவர் நேற்று முன்தினம் இரவு உணவருந்திவிட்டு தூக்கத்திற்கு சென்றார். பின்னர் நேற்றுக்காலை படுக்கையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சடலம் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் மரணத்திற்கான காரணம் கண்டறியப்படவில்லை.

பரிசோதனைகளுக்காக உடற்கூற்று மாதிரிகள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவரது சடலத்தை புதைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-7,10,33)

## கொக்குத்...

ரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் அகழ்வாய்வுகளுக்குரிய நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ள நிலையிலேயே, குறித்த மனிதப் புதைகுழி அகழ்வாய்வுப்பணிகளை மீள ஆரம்பிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## கப்பல் சேவை...

வைப்பதாக கப்பல் சேவை நிறுவனம் அறிவித்தது.

இதன்படி, நாகப்பட்டினத்திலிருந்து காங்கேசன்துறை வரையான கப்பல் சேவை ஆரம்பிக்கும் திகதி மீண்டும் ஒத்திவைத்து மே 19ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அந்தமானில் இருந்து நாகைக்கு வரவேண்டிய கப்பல் தாமதமானதால், இவ்வாறு கப்பல் சேவை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முன்பதிவு செய்த பயணிகள் பயணதிகதியை மாற்றிக் கொள்ளலாம் அல்லது கட்டணத்தை திரும்ப பெற்றுகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## அமைதியான...

இலங்கை இந்துமாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவலமாக இறந்தவர்களுக்கான இறுதிக்கடன்களோ, அவர்களுக்கான சமய வழிபாடுகளோ நிறைவேற்ற முடியாத துயரத்தோடு உறவுகளை இழந்தவர்கள் வேதனையுறும் நிலையில் மனிதாபிமான பிரார்த்தனையை அனைவரும் செய்யவேண்டியது தார்மீகக் கடமையாகும்.

எனவே அனைத்து மக்களும் வேறுபாடின்றி ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள். உருக்கமான வழிபாட்டை யாரும் குழப்பாதீர்கள்.

வழிபாட்டு நாளை அரசியல் விடயமாகக் கொள்ளாமல் அனைவரும் அமைதியாகப் பிரார்த்திக்க வேண்டும்.

சைவமக்கள் பிதிர்களை நினைந்து வழிபாடு செய்யும் மரபுக்கமைய ஆலயங்களில் மோட்ச அர்ச்சனைகளைச் செய்து வழிபாடு செய்யுங்கள்.

உலகில் எவருக்கும் இத்தகைய அவலங்கள் ஏற்படக்கூடாது என அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக என்று தெரிவித்துள்ளார். (ம-7,10)

## மூதூரில்...

டுள்ளது.

கடந்த 12ஆம் திகதி நள்ளிரவில் திருகோணமலை, சம்பூர் பொலிஸ் பிரிவிலுள்ள சேனையூர் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறிய குற்றச்சாட்டில் பல்கலைக் கழக மாணவி மற்றும் ஏனைய மூவர் என நான்கு [illegible] னால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து, குறித்த நால்வரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து, நால்வருக்கும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம-7,10)

## தமிழர்கள்...

விடுக்கின்றது.

இந்த நாளில் முள்ளிவாய்காலில் சென்று நினைவேந்தக் கூடியவர்கள் வழமைபோன்று முள்ளிவாய்க்கால் பொதுக் கட்டமைப்பு ஒழுங்கு செய்த நிகழ்வுகளில் பெருந்திரளாக பங்கேற்குமாறு வேண்டி நிற்கின்றோம்.

அதே நேரம் அங்கு செல்லமுடியாதவர்கள் தங்கள் பிரதேச வழிபாட்டுத் தலங்களில் ஒன்றுகூடி பிரார்த்தனைகளை மேற்கொள்ளவும் வேண்டுகின்றோம்.

அன்றைய தினம் அனைத்து தமிழர் வணிக வளாகங்கள் பொது இடங்களில் கறுப்புகொடிகளை பறக்கவிடுமாறும் கறுப்புப் பட்டியுடன் கடமைகளில் ஈடுமாறும் கோருகின்றோம்.

எமது தெருக்களை பொது இடங்களை வீட்டின் முன்னுள்ள வீதியோரங்களை துப்புரவு செய்வதுடன் அனைத்து கேளிக்கை நிகழ்வுகளையும் தவிர்த்து முள்ளிவாய்கால் கஞ்சியை ஒரு நேர உணவாக வேனும் உண்பதற்கு ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் முன் வருவோம்.

மேலதிக தனியார் கல்வி நடவடிக்கைகள் அனைத்தையும் அன்றைய தினம் முழுமையாக நிறுத்தி எம் இளையோருக்கு எம் வலிகளின் ஆழத்தை சாத்வீகமாக உணர்வு பூர்வமாக வெளிப்படுத்துவோம்.

பல்கலைக் கழக மாணவர் ஏற்பாடு செய்துள்ள இந்த காலப்பகுதிக்கான இரத்ததானமுகாம்களில் பங்கேற்போம்.

வலி சுமந்த குடும்பங்களிற்கு மனரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஆறுதல் அளிப்போம்.

இந்த தமிழ்த் தேசிய துக்க நாளில் ஒட்டு மொத்த தமிழராய் நிலத்திலும் புலத்திலும் எம் உச்ச பட்ச ஆத்மார்த்த உணர்வை அமைதியாக உறுதியாக வெளிக்காட்டுவோம்.

அதற்காக அனைவரும் திட சங்கற்பம் பூணுவோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

# அரசை விரட்டியடிக்க எதிரணிகளை ஒன்றிணையுங்கள்

## சந்திரிகாவிடம் டிலான் வேண்டுகோள்

ரணில் - ராஜபக்ஷ அரசை வீட்டுக்கு விரட்டியடிப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியுடன் அனைத்து சக்திகளையும் ஒன்றிணைக்கும் பொறுப்பை முன்னெடுக்குமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது, "ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைப்பதற்குரிய முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்டவர்கள் அரசு பக்கமே உள்ளனர்.

இதே வழியில் சுதந்திரக் கட்சி பயணித்தால் யானை விழுங்கிய விளாம் பழத்தின் நிலையே சுதந்திரக் கட்சிக்கு ஏற்படும்.

அவ்வாறானதொரு நிலை ஏற்படாமல் இருக்கவும், ஊழல்மிகு இந்த அரசை விரட்டியடிப்பதற்காகவும் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் அனைத்து சக்திகளையும் இணைக்கும்பொறுப்பை முன்னெடுக்குமாறு சந்திரிகாவிற்கு அழைப்பு விடுத்துள்ளார். (ம-7,10)

மஹஜன சம்பத
திகதி 2024.05.16
சீட்டிழுப்பு இலக்கம் 5477
J 6 8 1 3 3 1
அத சம்பத J 1 3 3 1
சீட்டிழுப்பு இலக்கம் 052

தன நிதானய
திகதி - 2024.05.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1507
I 03 18 32 70 I
28405

மெகா பவர்
திகதி 16/05/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1825
J 25 15 17 21 38
13598

லக்கி 7 VIP
திகதி 2024.05.16
சீட்டிழுப்பு இலக்கம் 303
Q 2 7 5 0 1 2 Q

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3719
சீட்டிழுப்பு திகதி 16.05.2024
F 40 48 66 78
F 33125

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.16
சீட்டிழுப்பு இலக்கம் 0786
துலாம் 04 29 41 57 துலாம்
21954 27

உத்தியோகபூர்வ முடிவுகள்
16.05.2024 வெற்றி வாரம் 185 வர்ணம் மஞ்சள்
ஆங்கில எழுத்து J
0 8 5 4 3 1
64660 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் 22,382,236.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2451 வர்ணம் பச்சை சீட்டிழுப்பு திகதி 16.05.2024 தினம் வியாழன்
04 29 36 71 F
76505
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 88,741,644.80

சனிதா
திகதி 2024.05.16 வெற்றி வாரம் 4612 வர்ணம் சிவப்பு
05 16 18 59 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,011,378.00
49429

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4163 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.05.16 தினம் வியாழக்கிழமை
14 24 36 48 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00
883889

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 33 08 14 28 32
1627
499533
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 522,993,460.20
16.05.2024 வியாழன்

வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2277
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 113,591,922.40
சீட்டிழுப்பு திகதி : 2024.05.16
ADA KOTIPATHI
01 35 46 54 K
239964

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CANADA VISA

- உங்கள் குடும்பத்துடன் பயணிக்கலாம்.
- வங்கி வசதிகள் செய்து தரப்படும்.
- 20 வருட அனுபவம், 1800 பேரை அனுப்பி வைத்துள்ளோம்.
- கிடைத்தவர்களை நேரடியாகப் பார்வையிடலாம்.

(511)

021 222 5686
076 424 7111
**Expo Net Overseas Consultants**
345, Kasthuriyar Road, Jaffna.

## NEC யாழ்நகர்

A/L 2026
கலை
வர்த்தகம்
ஆரம்பம் : May 19
ஞாயிறு காலை 09 மணி

மாணவர்கள் பாடத் தெரிவினை மேற்கொள்வதற்காக இம் மாதக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது

(765)

தொடர்பு : 076 5350 999

## கொழும்பில் அறைகள், வீடு நாள் வாடகைக்கு

தெகிவளையில் காலி வீதி - PIZZA HUTக்கு முன்பாக குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் வீடுகள் சகல வசதிகளுடனும் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.

A/C Room - 6000/-இல் இருந்து
வீடு - 12000/-இல் இருந்து

(C-0384)

V2 GUEST 0743900360 0743900361

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0384)

## கணக்கீடு A/L 2026

திரு.க.பா.பாலகஜன் SLTS
B.com(JAF), H.N.Dip-in-Acc (ATI)
Dip-in-Edu(OUSL), M.com (Hons), Acc.spl
உங்களுக்கான புதிய அனுமதியினை பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

NEC - யாழ்நகர்
KBK - கொழும்புத்துறை
KBK - கந்தர்மடம்
Zoom - இலங்கை பூராகவும்

A/L 2024, 2025 புதிய அனுமதிகள்

கடந்த வருடம் யாழ் மாவட்டத்தின் முன்னணி பெறுபேறுகள் District 01 (உட்பட), 02(கிளி), 03, 04, 04(மன்), 05, 08, 10, 13, 22
அதிகூடிய A மற்றும் B சித்திகள்

(C-0353)

077 4520 043

## A/L ICT வகுப்புக்கள் திரு.இ.குமரன்

A/L 2026 ஆரம்பம்
சனிக்கிழமை 18.05.2024 2 pm
A/L 2024 Repeat ஆரம்பம்
100% Practical-Oriented Class
Mr.R.Kumaran-B.Sc.

Computer Lab
Study Guide
Unit Exam
Past Papers
Revision

(768) ICT துறையில் 22 வருட கற்பித்தல் அனுபவம்

MIS ICT COLLEGE TP:0776577359,#74, Sabapathy Lane, Jaffna. தலையாழி, பிரம்படி

## DCM யாழ் நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை
A/L 2026
கலை, வர்த்தகப் புதிய பிரிவு
ஆரம்பம் : 25.05.2024 காலை 8.00 மணி (சனி)
முன் பதிவுகளை அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்.
நிர்வாகம் : 077 7789 815

(C-0381)

## A/L - வரலாறு

மாவட்ட, தேசிய ரீதியில் உயர் சாதனை மிக்க பெறுபேறுகளை உருவாக்கும் உங்கள் ஆசான்
M.பத்மன் B.A (Hons) History, P.G.D.E, M.A (Hons) History, M.E.D (O.U.S.L)
(க.பொ.த. உயர்தர வரலாறு பாட கற்பித்தலில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர் மற்றும் வளவாளர்)
A/L 2025, 2026 முதலானவற்றுக்கான அனுமதிகள் வழங்கப்படும்.
கற்பிக்கும் இடங்கள்

D.M.I ஆரியகுளம். யாழ். நகர் | BITSMANS மானிப்பாய் | உயர் கலைக் கல்லூரி குளப்பிட்டி

(c-0379)

## நாளை ஆரம்பம்

A/L 2026
கலை
வர்த்தகம்
காலை - 9.00
DMI Jaffna

(766)

077 848 0604

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சம் தொடக்கம் 20 இலட்சம் வரை உள்ளது.
- தரகர் தேவையில்லை.

(757)

077 88 62 927

## சேவைகள்

A/L, O/L பரீட்சை எழுதிய மாணவர்கள் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ளும் வகையில் வர்த்தக துறையில், கணக்குத் துறையில் ஆர்வம் உள்ளவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும்.

(c-0382)

தொடர்புகளுக்கு :- 076 315 6470

## A/L தொழினுட்பப்பிரிவு

smart thinking leads to innovate
Techna
Technical Institute

புதிய பிரிவு ஆரம்பம்
A/L 2026
19.05.2024(ஞாயிற்றுக்கிழமை)
காலை 8.00 மணிக்கு

உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்
M.விஷ்ணு | P.நிரோஜனன்
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
S.சக்தி
பொறியியல் தொழினுட்பவியல்
S.மயூரதன்
ICT | கணிதம்
T.லவன் | T.சசிகரன்
விவசாய விஞ்ஞானம் | புவியியல்
S.சஜீபன் | S.P.கரன்

மாணவர்கள் TECHNAவை ஏன் தெரிவு செய்ய வேண்டும்?


மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனிப்பு.
தொடர்ச்சியாக 7 நாட்களும் வகுப்புக்கள் நடைபெறும்.
மாதாந்தப் பரீட்சை, அலகுப் பரீட்சை, தவணைப்பரீட்சைகள்
புள்ளிகளுகேற்ப Z.SCORE மூலமான தரப்படுத்தல்.
பாடங்களுக்கான கையேடுகள் வழங்கப்படும்.
அனுபவம்மிக்க ஆசிரியர்களின் வழிகாட்டல்.
குழு அடிப்படையிலான செயன்முறை பயிற்சி வகுப்புக்கள்
களப்பயணங்களை மேற்கொள்ளல்.
இறுதிப்பரீட்சையை நோக்கிய விளைத்திறனான தயார்படுத்தல்.

தொழினுட்பப்பிரிவு மாணவர்களா நீங்கள்?
உங்கள் கனவுகளை நினைவாக்க எங்களுடன் இணையுங்கள்

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.
077 170 3549

(762)


## 31ம் நாள் நினைவு



தோற்றம் 05 - 07 - 1950
மறைவு 18 - 04 - 2024

கடந்த 18.04.2024 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் நாகராசா சாம்பசிவம்

அவர்களின் 31 ஆம் நாள் கிரியைகள் 18.05.2024 சனிக்கிழமை நண்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

(C-0378)

2ஆம் வட்டாரம், கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.
077 273 3861
இங்ஙனம்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org